| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 31. | கடலை, கஞ்சி, டோஸ் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | கோழி இறைச்சி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | கணினி உதிரிப்பாக விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | தொட்டி மீன் வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | பிரம்பாலான பொருள்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | மணிக்கடை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | தையல் இயந்திரம், தொலைக்காட்சி, வானொலி | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | ஸ்ரீல் அலுமாரி, தளபாடங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | சீற், குசன் செய்யும் நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | மீன்பிடி உபகரண விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | மின் உபகரண விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | நடமாடும் வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | டயர், ரீப் ஒட்டுப் போடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | தகர, ஒட்டு வேலை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | பாட்ஸ், உபகரணம் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | அதிஷ்ட இலாபச்சீட்டு விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | விநோதப் பொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 49. | புதிய, பழைய மின்சாரப் பொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 50. | மரத்தளபாடப் பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 51. | படங்கள் சட்டமிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 52. | அலுமினியத் தளபாடங்கள் உற்பத்தி செய்யுமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 53. | ரயர், ரீப் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 54. | பிரயாண முகவர் நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 55. | எழுதுகருவி, பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 56. | சலவைக்கடை/ஸ்திரிக்கடை | 500.00 | 750.00 | 1000.00 |
| 57. | சாதாரண சாப்பாட்டுக்கடை | 500.00 | 750.00 | 1000.00 |
| 58. | சாதாரண சாப்பாட்டுக்கடை விடுதி | 500.00 | 750.00 | 1000.00 |
| 59. | இளைப்பாறும் விடுதி | 500.00 | 750.00 | 1000.00 |
| 60. | போக்குவரத்துச் சேவை | 500.00 | 750.00 | 1000.00 |
| 61. | வைத்திய நிபுணர் ஆலோசனைச் சேவை | 500.00 | 750.00 | 1000.00 |
| 62. | பான வகை மொத்தம் வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 63. | கையடக்கத் தொலைபேசி, கிரிகட் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 64. | பால்/பால் உற்பத்திப்பொருள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 65. | மீன், மரக்கறி நடமாடும் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 66. | பழைய, புதிய டயர் சேமித்தலும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1000.00 |
| 67. | தற்காலிக கடைகள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I<br>வியாபாரம் அல்லது தொழில் விபரம் | நிரல் II<br>இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 68. | இலத்திரனியல் பொருட்கள் விற்பனை திருத்தம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 69. | சேதனப் பசளை உற்பத்தி, விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 70. | தேனீ வளர்ப்பு விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 71. | குளிர்சாதனப் பெட்டி திருத்துமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 72. | அழகுக்கலை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 73. | உடற்பயிற்சி கூடம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |



---

**காரைநகர் பிரதேச சபை**

கற்கள், மணல், கிரவல் வீட்டுக்கழிவுகள் அள்ளும் வாகனங்களுக்குரிய கட்டணமும்
வாடகைக்கு விடுதல் கட்டணமும் பின்வருமாறு அறவிடப்படும் - 2025

இவ்வறிவித்தல் 01.01.2025 அந்திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் நாள் ஒன்றிற்கு பின்வருமாறு அறவிடப்பட வேண்டும் என்று 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறவிக்கப்படுகின்றது.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| உழவு இயந்திரம் ஒரு நாளுக்கு (8 மணித்தியாலம்) | 3600.00 |
| இரண்டு சில்லு உழவு இயந்திரம் ஒரு நாளுக்கு (8 மணித்தியாலம்) | 1800.00 |
| புல் வெட்டும் இயந்திரம் (1 மணித்தியாலம்) | 350.00 |
| விசேடமாக பெரியளவிலான திண்மக்கழிவகற்றல் (1 லோட்) | 1500.00 |
| திண்மக்கழிவகற்றல் (வியாபார நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் மாதாந்தம்) | 200.00 |

## காரைநகர் பிரதேச சபை

மதிப்பீட்டு வரி (ஆதன வரி) - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 134 மற்றும் 146 ஆம் பிரிவின் கீழ் காரைநகர் பிரதேச சபைக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய நிர்வாக்ககட்ளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) 146 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் காரைநகர் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2133 ஆம் இலக்க 2019.07.19 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி பிரதேச சபை எல்லைக்குள் கட்டமைந்த பிரதேசங்கள் என அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசத்தினுள் அமைந்திருக்கும் வீடுகள். கட்டடங்கள், காணிகள் சிறுமனைகள் என்பனவற்றின் ஆண்டுப் பெறுமதியில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த மதிப்பீட்டு வரியை அறவிடுதல் வேண்டும்.

01. காரைநகர் வடக்கு உப அலுவலகம் 6%
02. காரைநகர் தெற்கு உப அலுவலகம் 6%

மேலும் 2025 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்திற்கு முன்னர் வருடாந்த மதிப்பீட்டு வரியை காரைநகர் பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டுமென்றும் அவ்வாறு அவ்வாண்டுக்கான வருடாந்த வீதவரி 2025 ஆம் ஆண்டு சனவரி 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டால் வருடாந்த வீத வரி தொகையிலிருந்து பத்து (10%) வீத கழிவும், அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு காலாண்டுக்கும் முன்னாலும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் ஏற்புடைய வீதவரித் தொகை காரைநகர் பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்தப்பட்டால் ஒரு காலண்டுக்குரிய தொகையில் ஐந்து(5%) வீத கழிவும் கரைநகர் பிரதேச சபையினால் வழங்கப்படல் வேண்டும் எனவும் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரியை குறித்த வருடத்தில் செலுத்த தவறின் அடுத்து வரும் ஆண்டுகளில் வதிவிட ஆதனங்களுக்கு பதினைந்து (15%) வீதமும் வர்த்தக ஆதனங்களுக்கு இருபது (20 %) வீதமும் தண்டம் அறவிடப்படும்.

### அட்டவணை

| நிரல் I<br>தவணை | நிரல் II<br>செலுத்த வேண்டிய திகதி | நிலல் III<br>5% கழிவுக்காக உரிமையுள்ள இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாம் காலாண்டு | 31.03.2025 | 31.01.2025 |
| இரண்டாம் காலாண்டு | 30.06.2025 | 30.04.2025 |
| மூன்றாம் காலாண்டு | 30.09.2025 | 31.07.2025 |
| நான்காம் காலாண்டு | 31.12.2025 | 31.10.2025 |

12 - 113/3

**காரைநகர் பிரதேச சபை**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கான வரி - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் உப பிரிவின் கீழ் காரைநகர் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக பிரதேச சபையின் இடப்பரப்பின் எல்லைகளினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி, கட்டட நோக்கங்களுக்கு அல்லது நிரந்தரமான அல்லது கிரமமான பயிர்ச்செய்கை நோக்கங்களுக்கு பொருத்தமானதாக இருக்கின்றவிடத்து அவை பயன்படுத்தப்படாமல் இருக்குமாயின் அத்தகைய காணியின் மூலதன இடவமைப்பு பெறுமதியின் இரண்டு (2%) வீத வரி ஆண்டு தோறும் காணியின் சொந்தக்காரரிடமிருந்து அறவிடப்படும்.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

12 - 113/4

---

**காரைநகர் பிரதேச சபை**

களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் கீழ் வரி அறவிடுதல் -2025

களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 இல் உள்ள உப பிரிவு 1 இன் நியதிகளின்படி திரைப்படக்காட்சி, வித்தைக்காட்சி, மாயாஜாலக் காட்சி, நாடக செயலாற்றுகைக் காட்சி, சங்கீத இசை நிகழ்ச்சிக்காட்சி ஆகியவற்றுக்கு அச்சிடப்படும் நுழைவுச்சீட்டு 25% களியாட்ட வரியாக 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய தீர்மானத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்றும் அதற்காக கீழே குறிப்பிட்டுள்ளவாறு உத்தரவுப்பத்திரக் கட்டணம் பொது செயலாற்றுகைக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 136 இலுள்ள பிரிவு 3 நியதிகளின்படி செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| 1. சங்கீத இசை நிகழ்ச்சி, நாடக செயலாற்று திரைப்படக்காட்சி, வித்தைக்காட்சி, மாயாஜாலக்காட்சி நாள் ஒன்றுக்கு | 100.00 |
| 2. திரைப்படக்காட்சி, சங்கீத இசை நிகழ்ச்சி, வித்தைக்காட்சி, மாயாஜாலக்காட்சி மேலதிக ஒவ்வொரு நாளுக்கும் | 25.00 |
| 3. நாடகச் செயலாற்றுகை பொருட்டு நாள் ஒவ்வொன்றிற்கும் | 250.00 |

12- 113/5

## காரைநகர் பிரதேச சபை

கொண்டு திரிந்து விற்கும் (நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாமை)
வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு வரி விதித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1998.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ''பகுதி IV (ஆ)" உள்ளூராட்சி பகுதியில் அமைச்சர் அவர்களினால் வெளியிடப் பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் கீழ் காரைநகர் பிரதேச சபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட அட்டவணைப்படி 2025.01.01 ஆந் திகதியிலிருந்து அறவீடு செய்ய வேண்டும் என்று 152 ஆம் இலக்க 2024.11.19 ஆம் திகதிய நிர்வாகக்கட்டளையின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்,

### அட்டவணை

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | துவிச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | 50.00 |
| 2. | மோட்டார் சைக்கிளில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | 100.00 |
| 3. | முச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | 100.00 |
| 4. | மோட்டார் வாகனத்தில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | 200.00 |
| 5. | தயாரிக்கப்பட்ட உணவு வகை நடமாடும் வாகனத்தில்/துவிச்சக்கர வண்டியில் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | 50.00 |
| 6. | நடைபாதை வியாபாரம் (25 சதுர அடிக்கு நாள் ஒன்றுக்கு) | 200.00 |
| 7. | வெதுப்பக உற்பத்திப்பொருட்கள் நடமாடும் வாகனத்தில் /முச்சக்கரவண்டியில் விற்பனை செய்தல் | 100.00 |

12- 113/6

---

## காரைநகர் பிரதேச சபை

வாகனங்கள், மிருகங்கள் மீதான வரிகள் - 2025

01.01.2025 ஆந் திகதயிலிருந்து தொடரப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரி 148 (2) ஆவது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் 147 ஆம் பிரிவின் நியதிகளின்படி வாகனம், மற்றும் மிருகங்களுக்கான வரி மேற்கூறப்பட்ட சட்டத்தின் 147 ஆவது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அட்டவணையிலுள்ளவாறு 01.01.2025 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இதன்கீழ் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31 ஆரு திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்று 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

**அட்டவணை**

| | | *I* ஆம் நிரல் | *II* ஆம் நிரல் |
|---|---|---|---|
| 1. | மோட்டார் கார், மோட்டார் முச்சக்கர வண்டி, லொறி, மோட்டார் சைக்கிள் , கார் ரிக்ஷோ, துவிச்சக்கர வண்டி, முச்சக்கர வண்டி தவிர்ந்த ஒவ்வொரு வாகனங்களுக்கும் | | 25.00 |
| 2. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிக்கும் | | 20.00 |
| | ஒவ்வொரு கை வண்டிக்கும் | | 10.00 |
| | ஒவ்வொரு ரிக்ஷோவுக்கும் | | 7.00 |
| | ஒவ்வொரு நாய்க்கும் | | 30.00 |

இருபத்தாறு அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சில்லுகளைக் கொண்ட பிள்ளைகளின் வண்டிகள், தள்ளு வண்டிகள், தனியார் வளவில் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத கைவண்டிகள் என்பன கொடுப்பனவில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இவ் அட்டவணையில் வியாபார நோக்கங்கள் என்பது, ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத்துடன் தொடர்புடையதாக விற்பனைக்கோ அல்லது வேறெதற்காகவோ எவையேனும் பொருட்களை அல்லது பண்டங்களை அல்லது ஏதேனும் எழுத்தினாலான அல்லது ஏற்றுதலை கொண்டு செல்லுதலை உள்ளடக்கும்.

| | | ரூபா. ச. |
|---|---|---|
| கட்டாக்காலி மாடு ஆடு பராமரிப்புக்கான கட்டணம் (நாளொன்றுக்கு) | | 1,000.00 |
| கட்டாக்காலி ஏற்றுக் கூலி | ஆடு | 500.00 |
| | மாடு | 1,000.00 |
| கட்டாக்காலி பிடி கூலி | ஆடு | 2,000.00 |
| | மாடு | 3,000.00 |

கட்டாக்காலிகளாக பிடிக்கப்பட்ட ஆடுகள் மாடுகள் தொடர்பில் மேற்படி கட்டணம் அறவிடப்படும்.

12- 113/7

---

**காரைநகர் பிரதேச சபை**

*கட்டிடம் அமைத்தலுக்கான அனுமதியும் கட்டணங்கள் விதித்தலும் உப பகுதினளாக பிரிக்கப்பட்ட காணிகளின் வரைபடங்களை அங்கீகரித்தலும் - 2025*

காரைநகர் பிரதேச சபை எல்லைக்குள் கட்டிடங்களுக்கு அனுமதியும், பரீட்சித்தல் கட்டணமும் முன் அனுமதி பெறாமல் கட்டியவர்களுக்கான தண்டப்பண அறவீடும் மற்றும் காரைநகர் பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும் காணிகளை உப பிரிவுகளாகப் பிரிக்கும்போது அதற்கான உப பிரிவுகளின் வரைபடங்களை அங்கீகரிப்பதற்கு காணி உறுதிப்பத்திரத்தையும், அதன் வரைபடமும் காட்டப்படும் காணியின் அளவுப்படி ஒரு பரப்பு நிலத்திற்கான அறவீடும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அதிகாரசபையின் 2021.07.08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 01.01.2025 ம் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் என்பதை 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளையின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

12 - 113/8

## காரைநகர் பிரதேச சபை

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் -2025

மேற்படி விடயமாக காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் 23 (அ) எனும் பிரிவின் கீழான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், 2264/18 ஆம் இலக்க 2022.01.27 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமைவாக "ஈ" பகுதியில் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எமது சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் காரைநகர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு கீழவரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகர சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தல் கட்டணங்கள் ஆகியவை விதித்து அறவிடப்படல் வேண்டும் என்றும் இவ்வறிவித்தல் 2025.01.01 தொடக்கம் அமுல்படுத்தப்படும் என்றும் 2024.11.19 ஆந் திகதிய 152 ஆம் இலக்க நிர்வாகக்கட்டளையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

### அட்டவணை

1. எல்லா வாகன எரிபொருள் நிரப்பும் நிலையங்களும் (திரவப் பெற்றோலியம் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு உட்பட)
2. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மெழுகுவர்த்தி உற்பத்தி
3. பத்துக்கு மேற்பட்டவர்களும் 25 இற்கு குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.
4. பத்துக்கும் கூடுதலானவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மதுசாரமற்ற பானவகைகள்
5. உலர்பதனீட்டு முறைத் தொழிற்பாடுகளையுடைய அரிசி ஆலை
6. ஒரு மாதத்திற்கு 1000 கிலோ கிராமிலும் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்
7. புகையிலைக் களஞ்சியங்கள்
8. தொகுதியொன்றுக்கு 500 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட கந்தகத் தூள் மூட்டும் கொள்ளவுடைய கறுவா தூபமூட்டும் கைத்தொழில்கள்
9. உணவிற்குப் பயன்படுத்தப்படும் உப்பு சிப்பஞ் செய்தல், பதனிடுதல் கைத்தொழில்கள்
10. தேயிலைத் தொழிற்சாலைகள்
11. கொங்கிரீட் முன்வார்ப்புகள் கைத்தொழில்கள்
12. பொறி முறைப்படுத்தப்பட்ட சீமெந்துக் குற்றி தயாரிக்கும் கைத்தொழில்கள்
13. நாளொன்றுக்கு 20 மெற்றிக் தொன்னுக்கு குறைவான உற்பத்தித் திறன் கொண்ட சுண்ணாம்பு சூளைகள்
14. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்துக் கைத்தொழில்கள்
15. எல்லா விதமான சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் கைத்தொழில்கள்
16. கூரை ஓடு மற்றும் செங்கல் சூளைகள்
17. வெடிமருந்துகளைப் பயன்படுத்தும் கம்மியர் சுரங்கத்தொழில், நடவடிக்கைகளுடனான ஒற்றைத்துறை தகர்ப்புகள்
18. நாளொன்றுக்கு 50 கன மீற்றருக்கு குறைவான அரிக்கும் ஆற்றல் கொண்ட மர ஆலைகள் அல்லது மரத்தின் போரோன் செயற்படுத்தலில் அல்லது மரத்தை பருவப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள்
19. ஐந்துக்குக் கூடுதலான 25இற்கு குறைவான வேலையாட்கள் தொழிலுக்கு அமரத்தப்பட்டுள்ள பலநோக்கு தச்சுப்பொறிகளைப் பயன்படுத்தும் தச்சு வேலைக்களங்கள் அல்லது மரத்தை மெருகூட்டும் கைத்தொழில்கள் அல்லது மர வேலைத்தளங்கள்
20. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 இற்கு குறைவானதுமான அறைகளைக் கொண்ட வதிவிட வசதியுடைய ஹோட்டல்கள், விருத்தினர் விடுதிகள், வாடிவீடுகள்.

21. வாகனங்களைப் பழுது பார்க்கும் செயற்பாடுகள் அல்லது பராமதித்தல் செயற்பாடுகளையுடைய கராஜ்கள்
22. குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி உபகரணங்களும் முறைமைகளும் பழுது பார்த்தல், பேணல், நிறுவுதல், இணைத்துப் பொருத்துதல், உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளும் வேலைத்தளங்களும் பராமரிப்பு வசதிகளும் (கராஜ்கள் உட்பட) நடமாடும் வளிச் சீராக்கிகள், போக்குவரத்துக் குளிரேற்றிகள் மற்றும் குளிரேற்றல் மீட்பு மற்றும் மீள் பயன்பாடு போன்ற சார்புடைய செயற்பாடுகள் உட்பட
23. வாகனப் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள்.
24. பத்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எல்லா விதமான மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பழுதுபார்த்தல்
25. ஈயம் உருக்குதல் புற நீங்கலாக அச்சுக் கூடங்களும் எழுத்தச்சுப் பொறிகளும்

**பரிசோதித்தல் கட்டணம்**

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான ஆகக்கூடிய கட்டணம் உரிய கைத்தொழில் அல்லது வேலைத்திட்டத்தின் முதன்மை மூலதன முதலீட்டின் மீதான அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இந்த பரிசோதித்தல் கட்டணம் கீழ்க்குறிப்பிட்டவாறு ஆகக்கூடிய ஒன்றிற்கு அமைவாக அறவீடு செய்யப்படும்.

**அட்டவணை**

| | முதன்மை முதலீடு பரிசோதனைக் கட்டணம் | வெளிக்கள (ஆகக் கூடிய கட்டணம்) ரூபா ச. |
|---|---|---|
| 1. | ரூபா 250,000.00 உம் அதற்கு குறைந்ததும் | 3,000.00 |
| 2. | ரூபா 250,001.00 - ரூபா 500,000.00 | 3,750.00 |
| 3. | ரூபா 500,001.00 - ரூபா 1,000,000.00 | 5,000.00 |
| 4. | ரூபா 1,000,000.00 மேல் | 10,000.00 |

சுற்றாடல் பாதுகாப்பு உரிமக் கட்டணம் ரூபா 4000.00 (மூன்று வருடத்திற்கு ஒரு தடவை)

12 - 113/9

---

**காரைநகர் பிரதேச சபை**

சபையின் தண்ணீர்க்கட்டணம், தண்ணீரத்தாங்கி வாடகைக்குவிடல் கட்டணம் - 2025

இவ்வறிவித்தல் 01.01.2025 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் தண்ணீர் தாங்கி வாடகைக்குவிடல், தண்ணீர் அதன் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும் என 152 ஆம் இலக்க 2024.11.19 ஆம் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| 1. 1,000 லீற்றர் குடிநீர் விநியோகம் செய்வதற்கான கட்டணம் | 1300.00 |
| 2. 1000 லீற்றர் குடிநீர் விசேடமாக விநியோகம் செய்வதற்கான கட்டணம் | 1500.00 |
| 3. 1,000 லீற்றர் வீட்டு பாவனை நீர் விநியோகம் செய்வதற்கான 1000.00 கட்டணம் | 1000.00 |
| 4. தண்ணீர் தாங்கி (நாள் ஒன்றிற்கு) வாடகை | 500.00 |

| | ரூபா |
|---|---|
| 5. நீர்த்தாங்கி ஏற்றியிறக்கல் கட்டணம் | 800.00 |
| 6. உருளை வாடகை சிறியது (நாளொன்றிற்கு) | 1000.00 |
| 7. பக்கோ வாடகை (போக்குவரத்துச்செலவு இன்றி) | 6000.00 |
| 8. பக்கோ போக்குவரத்துக் கூலி | 1000.00 |

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

12-113/10

---

## காரைநகர் பிரதேச சபை

சான்றிதழ்களும் படிவங்களுக்குமான கட்டணம் விதித்தல் -2025

இவ்வறிவித்தல் 01.01.2025 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் சான்றிதழ்கள், படிவங்கள் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவீடு செய்யப்படவேண்டு என்று 152 ஆம் இலக்க 2024.11.19 ஆம் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

### அட்டவணை

| தொடர் இல. | | ரூபா.ச. (NBT,VAT தவிர்ந்த) |
|---|---|---|
| 01 | காணிப்பெயர் மாற்றுப்படிவம் பரிசீலனைக்கட்டணம் | 700.00 |
| 02 | படவலைஞராக பதிவு, புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் | 1050.00 |
| 03 | உத்தரவு பெற்ற நில அளவையாளராக பதிவு செய்வதற்கான கட்டணம் | 1550.00 |
| 04 | உத்தரவு பெற்ற நில அளவையாளராக பதிவு புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் | 1050.00 |
| 05 | நெல்மூட்டை ஒன்று வெளியே கொண்டு செல்லல் | 50.00 |
| 06 | விறகு, வைக்கோல், கிடுகு இரண்டு சக்கர உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லல் | 150.00 |
| 07 | அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்களின் மேலதிக பிரதி வழங்குவதற்கான | 200.00 |
| 08 | வாகன விண்ணப்பப்பத்திரம் | 16.00 |
| 09 | மிருக வரி விண்ணப்பப்பத்திரம் | 25.00 |
| 10 | துவிச்சக்கர வண்டி | 100.00 |
| 11 | காணிப்பெயர்மாற்றம் | 500.00 |
| 12 | கட்டட விண்ணப்பப்படிவம் | 500.00 |
| 13 | குடிபுகு சான்றிதழ் | 4000.00 |

| தொடர் இல. | | ரூபா.ச (NBT, VAT தவிர்ந்த) |
|---|---|---|
| 14 | காணிஉப பிரிவிடுகை | 500.00 |
| 15 | ஆதன உரிமச்சான்றிதழ் | 500.00 |
| 16 | காணி ஒருங்கிணைப்பு | 500.00 |
| 17 | சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் | 500.00 |
| 18. | காலநீடிப்பு | 500.00 |
| 19 | வீதி எல்லைச்சான்றிதழ் | 500.00 |
| 20 | வியாபார உரிமம் | 500.00 |
| 21 | வியாபார வரி | 500.00 |
| 22 | சுற்றாடல் உரிமம் | 1000.00 |
| 23 | படவரைஞர் பதிவு | 1000.00 |
| 24 | கேள்வி கோரல் படிவம் | 1000.00 |
| 25 | வழங்குனரை பதிவு செய்தல் | 1000.00 |
| 26 | மருத்துவ சான்றிதழ் (ஆயுள்வேதம்) | 1000.00 |
| 27 | விலைமதிப்பீட்டுத்திணைக்கள பரிசீலனைக்கட்டணம் | 200.00 |
| 28 | நூலக அங்கத்தவர் விண்ணப்படிவக்கட்டணம் | Free |
| 29 | நூலக அங்கத்தவர் புதுப்பித்தல் | Free |
| 30 | திரைப்படம், நாடகம், இசை நிகழ்ச்சி | Free |
| 31 | கழிவகற்றல் | Free |
| 32 | உயர் தொழில் | Free |
| 33 | விளம்பரம் | Free |
| 34 | நீர்வழங்கல் | Free |
| 35 | நாய் உரிமம் | Free |
| 36 | மருத்துவ சான்றிதழ் - உணவு நிலையங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கானது | Free |
| 37 | கொல்கள் விண்ணப்பம் | Free |
| 38 | மயானப் பாவனை விண்ணப்பம் | Free |
| 39 | வாகனம் பொறிகள் வாடகை | Free |

12-113/11

---

## காரைநகர் பிரதேச சபை

*ககூரினா சுற்றுலா மையத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபம் வாடைக்கு விடல் - 2025*

இவ்வறிவித்தல் 01.01.2025 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் பொதுநோக்கு மண்டபம் வாடகைக்குவிடல் விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்களுடன் அறவிடப்படல் வேண்டும் என 152 ஆம் இலக்க 2024.11.19 ஆம் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறியத்தருகின்றேன்.

### அட்டவணை

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | பொதுநோக்கு மண்டபத்திற்காக முழு நாள் வாடகை | 2,500.00 |
| 2. | பொதுநோக்கு மண்டபத்திற்கான அரைநாள் வாடகை | 1,500.00 |

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

12-113/12

**காரைநகர் பிரதேச சபை**

விளம்பரக் கட்டணங்களுக்கான கட்டணம் விதித்தல் -2025

இவ்வறிவித்தல் 01.01.2025 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் விளம்பரங்களுக்கு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவீடு செய்யப்படவேண்டும் என்று 152 ஆம் இலக்க 2024.11.19 ஆம் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

**அட்டவணை**

| | 3 மாதம் ரூபா சதம் | 12 மாதம் ரூபா சதம் |
|---|---|---|
| 01. கொடி விளம்பரம் 1 சதுர அடி | 10.00 | 40.00 |
| 02. ஒளியூட்டப்பட்ட விளம்பரங்கள் 1 சதுர அடி | - | 100.00 |
| 03. ஒளியூட்டப்படாத விளம்பரங்கள் 1 சதுர அடி | - | 50.00 |
| 04. சுவர்களில் அமைக்கப்பட்ட விளம்பரம் 1 சதுர அடி | - | 50.00 |

12 - 113/13

---

**காரைநகர் பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 அம் இலக்க 109(ஈ) பிரிவின் பிரகாரம் சூரினா சுற்றுலா மையத்தின் சேவைக்கான கட்டணம் அறவிடல் 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க 109(ஈ) பிரிவின் பிரகாரம் காரைநகர் பிரதேசசபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் படி காரைநகர் பிரதேச சபையின் பரிபாலனத்தில் உள்ள சூரினா சுற்றுலா மையத்திற்குள் உள்நுழையும் வாகனங்கள் மற்றும் பொது மக்களுக்கான நுழைவுக் கட்டணங்கள் கீழ் வரும் அட்டவணைகளில் விவரிக்கப்பட்டவாறு 01.01.2025 ஆந் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்படும் என்பதை 19.11.2024 ஆந் திகதிய 152 ஆம் இலக்க நிர்வாகக்கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

**அட்டவணை**

| இல. | விபரம் | கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. | சிறியவர்கள் | 20.00 |
| 2 | பெரியவர்கள் | 30.00 |

| இல . | விபரம் | கட்டணம் ரூபா |
|---|---|---|
| 3. | வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் | 500.00 |
| 4. | புகைப்படப்பிடிப்புக்கு வருபவர்கள் | 2000.00 |
| 5. | மலசலகூட கட்டணம் | 30.00 |
| 6. | நன்னீர் குளியலறையில் குளிப்பதற்கான கட்டணம் (50L) | 50.00 |

ககூரினா கடற்கரை சுற்றுலா மையப்பகுதிக்கு வாகனங்களில் வருபவர்களுக்கு (பயணிகள் கட்டணம், வாகனக்கட்டணம் உட்பட ) பின்வரும் கட்டணம் அறவிடப்படும் என்பதை 152 ஆம் இலக்க 19.11.2024 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளை மூலம் நடைமுறைப்படுத்துவது என அறியத்தரப்படுகின்றது.

**பயணிகள் கட்டணம், வாகனக்கட்டணம் உட்பட கட்டண விபரம்**

| இல. | விபரம் | கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. | துவிச்சக்கரவண்டி | 50.00 |
| 2. | மோட்டார்சைக்கிள் | 100.00 |
| 3. | முச்சக்கரவண்டி (ஆட்டோ) | 200.00 |
| 4. | கார், பிக்கப் போன்ற வண்டிகள் | 300.00 |
| 5. | வான் | 500.00 |
| 6. | மினிபஸ் | 800.00 |
| 7. | பஸ் | 1200.00 |
| 8. | சமையல் செய்யும் இடத்துக்காக வாடகை | 200.00 |
| 9. | வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கான கட்டண குளியலறை | 200.00 |
| 10. | மலசலகூடம் (ஆண்,பெண், மாற்றுத்திறனாளிகள்) | 50.00 |
| 11. | வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கான மலசலகூடம் | 250.00 |

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

12 - 113/14

---

**காரைநகர் பிரதேச சபை**

உயர் தொழில் மீதான உரிமம் - 2025

இவ்வறிவித்தல் வர்த்தமானி பிரசுரத்தில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து தொடரப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் 152(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி குறித்த சில தொழில்கள்,உயர் தொழில்கள் என்பன மீதான வரி மேற்கூறப்பட்ட சட்டத்தின் 152(1) ஆவது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அட்டவணையிலுள்ளவாறு பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இதன்கீழ் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்று 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| **ஆண்டிற்கான தொழில் எடுப்பனவுகள்** | |
| 1. ரூபா 6,000.00இனை விஞ்சாதவிடத்து | இல்லை |
| 2. ரூபா 6,000.00இனை விஞ்சி ஆனால் ரூபா 12,000.00இனை விஞ்சாதவிடத்து | 90.00 |
| 3. ரூபா 12,000.00இனை விஞ்சி ஆனால் ரூபா 18,750.00 இனை விஞ்சாதவிடத்து | 180.00 |
| 4. ரூபா 18,750.00 இனை விஞ்சி ஆனால் ரூபா 75,000.00இனை விஞ்சாதவிடத்து | 360.00 |
| 5. ரூபா 75,000.00இனை விஞ்சி ஆனால் ரூபா 150,000.00இனை விஞ்சாதவிடத்து | 1,200.00 |
| 6. ரூபா 150,000.00இனை விஞ்சுகின்ற விடத்து | 3,000.00 |

12 - 113/15

---

## காரைநகர் பிரதேச சபை

சுடுகாடுகள், இடுகாடுகள் தொடர்பான கட்டண அறவீடு - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 127 ஆம் பிரிவு மற்றும் 231 ஆம் அத்தியாயம் மயான பூமிக் கட்டளைச் சட்டத்தின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் காரைநகர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மயான பூமிகளில் அடக்கம் செய்தல், எரித்தல், பெட்டியில் வைத்து அடக்குதல் என்பவற்றிற்கான கட்டணம் 2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அறவிட்டு பெற்றுக்கொள்வதற்கு 152 ஆம் இலக்க 2024.11.19 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளையின் மூலம் அனுமதிக்கப்பட்டதனை இதன் மூலம் அறிவித்துக்கொள்கின்றேன்.

**அட்டவணை**

| | ரூபா. ச. |
|---|---|
| 1. சுடுகாட்டில் இறந்த மனித உடல் ஒன்றை எரிப்பதற்கு | 2,000.00 |
| 2. இடுகாட்டில் இறந்த மனித உடல் ஒன்றை புதைப்பதற்கு | 2,000.00 |

கி. விஜயேஸ்வரன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காரைநகர்.

12 - 113/16

**புத்தளம் நகர சபை**

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2025

255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டத்தின் 160ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், புத்தளம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் புத்தளம்நகர சபையின் செயலாளர் எல்.பீ.ஜீ. பிரீதிகாஆகிய நான், குறித்த கட்டளைச்சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டத்தின் 160ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரிகாரம் புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2025 ஆம் அண்டிற்கு ஏற்புடையதாக மதிப்பீட்டு வரியை விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2024/11/12 ஆம் திகதிய Puuc/2024/11/2490 இலக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

எல்.பி.ஜி. பிரித்திகா,
செயலாளர் மற்றும் தத்துவங்கள், கடமைகள்,
பணிகளை நிறைவேற்றும் அலுவலர்.
புத்தளம் நகர சபை.

நகர சபை அலுவலம்,
புத்தளம்,
2024, நவெம்பர் 12.

**தீர்மானம்**

255 ஆம் அத்தியாயமாக நபர சபைக் கட்டளைச்சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டத்தின் 160ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக மதிப்பீட்டு வரியை விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் எனவும்,

255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 160ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்புத்தளம் நகர சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைற்துள்ள வீடுகளின், கட்டடங்களின், காணிகளின் மற்றும் சிறுமனைகளின் 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 2024ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டவருடாந்த பெறுமதியை 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும், குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில் 255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறித்த சொத்துக்கள் மீது மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வதிவிட இடங்கள் பொருட்டு வருடாந்த பெறுமதியில் நூற்றுக்கு மூன்று (3%) சதவீதவருடாந்த மதிப்பீட்டு வரியொன்றை விதித்தல் வேண்டும் எனவும், வர்த்தக மற்றும் வாணிப நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற இடங்கள் போருட்டு மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டின் வருடாந்த பெறுமதியில் நூற்றுக்கு எட்டு (8%) சதவீதவருடாந்த மதிப்பீட்டு வரியொன்றை விதித்தல் வேண்டும் எனவும்நான் பிரேரனை செய்கின்றேன்.

மேலும், 2025 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு காலாண்டு பொருட்டு முன்னெதிரே காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ள வருடாந்த மதிப்பீட்டு வரியை நகர சபை நிதியத்துக்கு செலுத்துதல் வேண்டும் எனவும், அத்தகைய வருடாந்த மதிப்பீட்டு வரியானது 2025 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படின் வருடாந்த மதிப்பீட்டு வரி பெறுமானத்தில் நூற்றுக்கு பத்துவீத (10%) தள்ளுபடியும், குறித்த அட்டவணையிலுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கு எதிரேயுள்ள 3 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் இயைபான காலாண்டின் மதிப்பீட்டு வரித்தொகை நகர சபை நிதியத்துக்கு செலுத்தப்படின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் நூற்றுக்கு ஐந்துவீத (5) தள்ளுபடியும் நகர சபையினால் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் நான் தீர்மானம் செய்கின்றேன்.

**அட்டவணை**

| காலாண்டு | செலுத்தப்பட வேண்டிய திகதி | 5% கழிவுக்கு தகுதிபெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 2025 மார்ச 31 க்கு முன் | 2025 சனவரி 31 |
| இரண்டாவது காலாண்டு | 2025 யூன் 30 திகதிக்கு முன் | 2025 ஏப்ரல் 30 |
| மூன்றாவது காலாண்டு | 2025 செத்தெம்பர் 30 திகதிக்கு முன் | 2025 யூலை 31 |
| நான்காவது காலாண்டு | 2025 திசெம்பர் 31 க்கு முன் | 2025 ஒக்டோபர் 31 |

12-211/1

---

**புத்தளம் நகர சபை**

உரிமப்பத்திரக் கட்டணம் விதித்தல் - 2025

255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 162 மற்றும் 164ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம்புத்தளம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.பீ.ஜீ.பிரீதிகாஆகிய நான், குறித்த சட்டத்தின் 162 மற்றும் 164 பிரிவின் (1) ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாகஉரிமக் கட்டணத்தை விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2024/11/12 ஆம் திகதிய Puuc/2024/11/2491 இலக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

எல்.பி.ஜி. பிரித்திகா,
செயலாளர் மற்றும் தத்துவங்கள், கடமைகள்,
பணிகளை நிறைவேற்றும் அலுவலர்.
புத்தளம் நகர சபை.

நகர சபை அலுவலம்,
புத்தளம்,
2024, நவெம்பர் 12.

**தீர்மானம்**

255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 162 மற்றும் 164 ஆம் பிரிவின் (10 ஆம் உட்பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்ததுவங்களின் பிரகாரம், குறித்த கட்டளைச்சட்டத்தின் அல்லது புத்தளம் நகர சபையினால் நிறைநேசற்றப்பட்ட நியம துணை விதியொன்றின் கீழ் விவரிக்கப்பட்ட மற்றும் குறித்தகட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இங்கு கீழுள்ள அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பணி பொருட்டு புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஓர் இடத்தை அல்லது வளாகத்தை பயன்படுத்துவதற்கு அதிகாரமளித்து 2025 ஆம் ஆண்டில் வழங்கப்படும் ஏதேனும் உரிமம் தொடர்பில் குறித்த அட்டவணையில் 11 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள உரிமக் கட்டணமொன்று 2025 ஆம் அண்டு பொருட்டு விதிக்கப்படல் வேண்டும் எனவும்.

மேலும், குறித்த இடம் அல்லது வளாகம் 1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சுற்றுலா சபைச் சட்டத்தின் பணி பொருட்டு சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஹோட்டலொன்று, உணவகமொன்று அல்லது தங்குமிடமொன்று எனின், அதற்கு ஏற்புடைய உரிமம் வழங்குகையில் குறித்த இடத்தின் அல்லது வளாகத்தின் 2024 ஆம் ஆண்டின் பெறுவனவுகளில் 1 உரிமக் கட்டணமொன்று 2025 ஆம் ஆண்டு பொருட்டு விதிக்கப்படல் வேண்டும் எனவும் நான் தீர்மானம் செய்கின்றேன்.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>உரிமத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 1. | பழப் பானங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. | பழங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. | அலங்கார பிளாஸ்டிக் பூக்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | சோறு கடை அல்லது உணவகத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | தேநீர் கடை அல்லது கோப்பி கடையினை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | முடி வெட்டும் கடையை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | காய்கறி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | தானிய விதை வகைகள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | சலவை நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | குளிர்பான வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | சில்லறை கடையை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | இனிப்புப் பண்டங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | மோட்டார் சைக்கிள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | பெக்கற்றில் அடைக்கப்பட்ட உலர் உணவு பொருட்கள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | உணவகம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | சில்லறை கடையை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | குரோசரி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | மிதிவண்டி பழுதுபார்க்கும் நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | கையடக்க தொலைபேசி விற்பனை மற்றும் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | வீட்டு மின் உபகரணம் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | காய்கறி விற்பனை நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | குடிப்பதற்கான நீரை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | இறப்பர் முத்திரை மற்றும் பிளாஸ்டிக் சின்னங்களை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | மட்பாண்டங்களை தயாரித்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | அலங்கார மலர்கள்மற்றும் மலர் கன்றுகளை நடும் சாடிக்கள், மலர் பசளை விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | ஆயுர்வேத தயாரிப்புக்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | கடைகள்/அலங்கார பொருட்களை விற்பனை செய்தல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | ஒளிப்படப் பிரதி எடுத்தல் அல்லது றோனியோ பண்ணுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | புகைப்படச்சுருள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | மோட்டார் வண்டிஉதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | மிதி வண்டி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I* *உரிமத்தின் தன்மை* | *நிரல் II* *இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| *33.* | *இரும்பு பொருட்களை விற்பனை நிலையம்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *34.* | *தும்புசார் பொருட்களை விற்பனை விற்பனை செய்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *35.* | *பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் எழுது கருவிகள் விற்பனை செய்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *36.* | *மணமகள்களை அழகுபடுத்தல் அல்லது அழகு நிலையங்கள்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *37.* | *மூக்கு கண்ணாடி விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *38.* | *பத்திரிகை விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *39.* | *சீமெந்து பொருட்கள் விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *40.* | *இறப்பர் சர்ந்த பொருட்களை விற்பனை செய்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *41.* | *கட்டிட பொருட்களை விற்பனை செய்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *42.* | *மீன்பிடி வலை மற்றும் மீனவ உபகரணங்கள் விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *43.* | *தனியார் தொலைபேசி தொடர்பாடல் நிலையம்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *44.* | *அலங்கார மீன்களை விற்பனை செய்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *45.* | *விறகு விற்பனை செய்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *46.* | *வீட்டு உபகரணங்கள் விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *47.* | *தைத்த ஆடை வியாபாரம்* | *500.00* | *750.00* | *1000.00* |
| | *ஆபத்துடைய வியாபாரம்* | | | |
| *01.* | *வானவெடிப்பொருள் விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *02.* | *கத்தி ஆயுதம் வர்த்தகம்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *03.* | *தேங்காய்எண்ணெய் தயாரிப்பு* | *500.00* | *750.00* | *1000.00* |
| *04.* | *காய்கறி உற்பத்தி* | *500.00* | *750.00* | *1000.00* |
| *05.* | *தீப்பெட்டி தயாரிப்பு* | *500.00* | *750.00* | *1000.00* |
| *06.* | *தங்க ஆபரண தயாரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *07.* | *மண் கழுவுதல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *08.* | *காலணி தயாரிப்பு* | *500.00* | *750.00* | *1000.00* |
| *09.* | *விசிறி வர்ணதந்தீட்டுதல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| | *விரும்பத்தகாத வியாபாரம்* | | | |
| *01.* | *மிருக உணவு விற்பனை அல்லது களஞ்சியப்படுத்தல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *02.* | *இறைச்சி விற்பனை செய்யும் தனியார் நிலையத்தை நடாத்துதல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *03.* | *மீன் விற்பனை செய்யும் தனியார் நிலையத்தை நடாத்துதல்* | *500.00* | *750.00* | *1000.00* |
| *04.* | *குளிரூட்டப்பட்ட இறைச்சி மற்றும் மீன் விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |
| *05.* | *சுருட்டு புகையிலை களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை* | *500.00* | *750.00* | *1000.00* |

## புத்தளம் நகர சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2025

255 ஆம் அத்தியாயம் நகர சபை கட்டளைச் சட்டத்தில் 165 (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம், புத்தளம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.பீ.ஜீ.பிரீதிகா ஆகிய நான், குறித்த சட்டத்தின் 165(அ) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2025 ஆம் அண்டுக்கு ஏற்புடையதாக கைத்தொழில் வரியை விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2024/11/12 ஆம் திகதிய Puuc/2024/11/2492 இலக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

எல்.பி.ஜி. பிரித்திகா,
செயலாளர் மற்றும் தத்துவங்கள், கடமைகள்,
பணிகளை நிறைவேற்றும் அலுவலர்.
புத்தளம் நகர சபை.

நகர சபை அலுவலம்,
புத்தளம்,
2024, நவெம்பர் 12.

### தீர்மானம்

255 ஆம் அத்தியாய நகர சபை கட்டளைச் சட்டத்தில் 165 அ ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், குறித்த கட்டளைச்சட்டத்தின் அல்லது புத்தளம் நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியம துணை விதிகளின் கீழ் புத்தளம் நகர சபையினால் 2025 ஆம் அண்டினுள் அறவிடப்படுகின்ற கைத்தொழில் வரி, குறித்தகட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள்கொண்டு நடாத்துகின்ற இங்கு கீழுள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழில்விடயத்திலும் அவ் அட்டவணையின் 11ஆம் நிரலில் நேரொந்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள அளவிலான வருடாந்த கைத்தொழில் வரியொன்றை 2025 ஆம் ஆண்டு பொருட்டு விதித்தல் வேண்டும் எனவும், குறித்த கைத்தொழில் வரிக்கு உட்பட்ட நபரொருவர், 255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 165(அ) ஆம் பிரிவின் (3)(1) ஆம் உட்பிரிவினால்உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025 ஆம் ஆண்டின் ஏப்றல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வரியை நகர சபைக்குச் செலுத்துதல் வேண்டும் எனவும் நான் பிரேரணை செய்கின்றேன்.

### அட்டவணை

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழிலின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 1. | தச்சு வேலைத்தளத்தை நடாத்துதல் (இயந்திரம்) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | தச்சு வேலைத்தளத்தை நடாத்துதல் (கரங்களினால்) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | மின் தொழில்நுடப் வேலைத்தளத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | இரும்பு கடைசல் நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | பாதணி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I* *கைத்தொழிலின் தன்மை* | *நிரல் II* *இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| *6.* | *குசன் வேலைத்தளத்தை நடாத்துதல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *7.* | *அரைக்கும் ஆலையை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *8.* | *பிரம்பு அல்லது பிரம்பு பொருட்களை தயாரித்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *9.* | *இயந்திர உதவியுடன் சீமெந்து கல் தயாரித்தல் (புளொக் கல்)* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *10.* | *கொப்பரா தயாரித்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *11.* | *தென்னை மர தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *12.* | *பித்தளை பொருட்களை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *13.* | *கொல்லன் பட்டறையை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *14.* | *திறப்பு வெட்டும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *15.* | *தங்கத்தினாலான பொருட்களை தயாரிக்கும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *16.* | *இறப்பரினால் பொருட்களை தயாரிக்கும் நிலையம்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *17.* | *மர முந்திரி ஒழுங்கமைக்கும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *18.* | *உப்பு தயாரிக்கும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *19.* | *மோட்டார் வாகனம் மற்றும் மிதி வண்டி ஒன்று சேர்த்தல் மற்றும் சேர்விஸ் (கழுவும்) நிலையத்தை* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *20.* | *அச்சகம் ஒன்றை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *21.* | *இரும்பு வெல்டிங் மற்றும் தயாரிப்பு நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *22.* | *இனிப்பு பண்டங்களை தயாரிக்கும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *23.* | *மட்பாண்டங்களை தயாரிக்கும் மற்றும் மெருகூட்டல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *24.* | *அலுமீனிய கபட் தயாரித்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *25.* | *சுண்ணாம்பு வெதுப்பகத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *26.* | *செங்கல் தயாரித்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *27.* | *நாரிழை கண்ணாடி மூலம் பொருட்களை தயாரித்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *28.* | *முட்டைக்காக கோழிகளை வளர்த்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *29.* | *ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *30.* | *முன் பொருத்தப்பட்ட கொன்கிறீட் தயாரிக்கும் நிறுவனத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *31.* | *இறைச்சிக்காக கோழிகளை வளர்த்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *32.* | *பாலுக்காக மிருக பண்ணையை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *33.* | *இறைச்சிக்காக மிருக பண்ணையை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *34.* | *தும்பினாலான பொருட்களை தயாரிக்கும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *35.* | *புடவை தயாரிக்கும்நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *36.* | *மிகச்ர் பக்கட்டில் அடைக்கும் நிலையத்தை நடாத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *37.* | *புகைப்பட நிலையம் மற்றும் ,ரசாயன கூடம்* | *500.00* | *750.00* | *1,000.00* |
| *38.* | *முச்சக்கர வண்டி நவீனமயப்படுத்தல்* | *500.00* | *750.00* | *1,000.00* |

**புத்தளம் நகர சபை**

*வியாபார வரி விதித்தல் - 2025*

255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 165(ஆ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம்புத்தளம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.பீ.ஜீ. பிரீதிகாஆகிய நான், குறித்த சட்டத்தின் 165(ஆ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2025 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய வியாபார வரியை விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2024/11/12 ஆம் திகதிய Puuc/2024/11/2493 லக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

எல்.பி.ஜி. பிரித்திகா,
செயலாளர் மற்றும் தத்துவங்கள், கடமைகள்,
பணிகளை நிறைவேற்றும் அலுவலர்.
புத்தளம் நகர சபை.

நகர சபை அலுவலம்,
புத்தளம்,
2024, நவெம்பர் 12.

**தீர்மானம்**

255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 165(ஆ) ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் புத்தளம் நகர சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், குறித்த கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கிழ் உத்தரவுப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது குறித்த சட்டத்தின் 165(அ) ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் வரியை செலுத்துவதற்கு அவசியமில்லாததும் உயர்தொழில் அல்லாததுமான ஏதேனும் வியாபாரத்தை புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 2025 ஆம் அண்டில் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வொரு நபரிடமிருந்தும், குறித்த வியாபாரத்தின் 2024 ஆம் அண்டின் வருமானம், இங்கு கீழுள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் விடய இலக்க வரையறைகளினுள் அடங்கும் சந்தர்ப்பத்தில் இங்கு 11ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள உபபெறுமானத்திற்கு ஏற்றவாறான வியாபார வரியொன்றை, 255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு பொருட்டு விதித்தல் வேண்டும் எனவும், அவ் வியாபார வரிக்கு உட்பட்ட நபரொருவர், குறித்த கட்டளைச்சட்டத்தின் 165 (ஆ) ஆம் பிரிவின் (2)(1) ஆம் உட்பிரிவினால் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2025 ஆம் அண்டின் ஏப்றல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வரியைநகர சபைக்குச் செலுத்துதல் வேண்டும் எனவும் நான் தீர்மானம் செய்கின்றேன்.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்*<br>*வியாபாரத்தினால் முன்னைய ஆண்டு கிடைப்பனவு* | *II ஆம் நிரல்*<br>*செலுத்த வேண்டிய வரி*<br>*ரூ. சீ.* |
|---|---|
| 1. 6000.00 மேற்படாத விடத்து | இல்லை |
| 2. 6000.00 மேற்படுகிறதெனினும் 12,000 மேற்படாத | 90.00 |
| 3. 12000.00 மேற்படுகிறதெனினும் 18750.00 மேற்படாத | 180.00 |
| 4. 18750.00 மேற்படுகிறதெனினும் 75000.00 மேற்படாத | 360.00 |
| 5. 75000.00 மேற்படுகிறதெனினும் 150000.00 மேற்படாத | 1,200.00 |
| 6. 150000.00 மேற்படுமிடத்து | 3,000.00 |

**புத்தளம் நகர சபை**

*வாகனம் மற்றும் கால்நடைகளுக்கு வரி விதித்தல் - 2025*

*255 ஆம் அத்தியாயம் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 162ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த கட்டளைச்சட்டத்தின் 163(1) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம், புத்தளம் நகர சபையின் தத்துவங்களை பிரயோகிக்கும், கடமைகள், பணிகளை நிறைவேற்றும் புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.பீ.ஜீ.பிரீதிகாஆகிய நான், குறித்த கட்டளைச்சட்டத்தின் 162ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த கட்டளைச்சட்டத்தின் 163(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம்புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக வாகனம் அல்லது விலங்கு வரி விதித்தலானது பின்வருமாறு அமைதல் வேண்டும் என 2024/11/12 அம் திகதிய Puuc/2024/11/2492 இலக்கம் கொண்ட தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*எல்.பி.ஜி. பிரித்திகா,*
*செயலாளர் மற்றும் தத்துவங்கள், கடமைகள்,*
*பணிகளை நிறைவேற்றும் அலுவலர்.*
*புத்தளம் நகர சபை.*

*நகர சபை அலுவலம்,*
*புத்தளம்,*
*2024, நவெம்பர் 12.*

**தீர்மானம்**

*255 ஆம் அத்தியாய நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த கட்டளைச்சட்டத்தின் 163(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த கட்டளைச்சட்டத்தின் 163(1) ஆம் பிரிவின் கீழ்புத்தளம் நகர சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம், புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 255ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 27ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக வாகனம் அல்லது விலங்கு வரி விதித்தலானது கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் அமைதல் வேண்டும் எனவும்,*

*255 ஆம் அத்தியாயமான நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 162 ஆம் பிரிவின் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த கட்டளைச்சட்டத்தின் 163(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டகுறித்த கட்டளைச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான எல்லா வாகனங்களும் அல்லது விலங்குகளும் இல்லையேல் அவற்றில் ஒரு வாகனம் அல்லது விலங்கு தொடர்பான வரியொன்றை அல்லது விலங்குகளும் இல்லையேல் அவற்றில் ஒரு வாகனம் அல்லது விலங்கு தொடர்பான வரியொன்றை அறவிடுவதற்கு இயைபான ஏற்பாடுகளின் கீழ்புத்தளம் நகர சபை அதிகாரப் பிரதேசம் பொருட்டு 2025 ஆம் ஆண்டில் இங்கு கீழுள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு ஒன்றை தம் உடைமையில் வைத்திருக்கும் ஆள் ஒவ்வொருவரும், இங்கு 11ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள வரியொன்றை 2025 ஆம் அண்டு பொருட்டு விதித்தல் வேண்டும் எனவும், குறித்த கட்டளைச்சட்டத்தின் 163ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்மூலம் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம்குறித்த வாகனம் மற்றும் விலங்கு வரிக்கு உட்பட்டவர், குறித்த வாகனம் அல்லது விலங்கினை தமது பொறுப்பில் வைத்துக்கொள்ளும் நாட்களின் எண்ணிக்கை முப்பது நாட்கள் பூர்த்தியடைந்தவுடன் 2025 ஆம் ஆண்டு பொருட்டான இந்த வரியை நகர சபைக்கு செலுத்துதல் வேண்டும் எனவும் நான் தீர்மானம் செய்கின்றேன்.*

**அட்டவனை**

| *தொ. இல.* | *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* |
|---|---|---|
| *1.* | i. மோட்டார் கார் வாகனம், முச்சக்கர வண்டி, மோட்டார் லொரி, மோட்டார் சைக்கிள், கரத்தை, கை கரத்தை, ரிக்ஷோ, சைக்கிள் மற்றும் ட்ரைசிகள் அல்லாத ஒவ்வொரு வாகனம் பொருமட்டு | ரூ.25.00 |

| தொ. இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|---|
| ii. | ஒவ்வொரு சைக்கிள் அல்லது ட்ரைசிகள் அல்லது சைக்கிள் கார் வண்டி, இல்லையேல் சைக்கிள் கரத்தை அல்லது ட்ரைசிகள் கார் வண்டி இல்லையேல் ட்ரைசிகள் கரத்தை பொருட்டு | |
| | (அ) அது வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுமாயின் | ரூ. 10.00 |
| | (ஆ) அது வர்த்தக நோக்கத்துக்காக அன்றி வேறு பணிக்காக பயன்படுத்தப்படுமாயின் | ரூ. 5.00 |
| iii. | ஒவ்வொரு கரத்தை பொருட்டு | ரூ. 20.00 |
| iv. | ஒவ்வொரு கை கரத்தை, முச்சக்கர மோட்டார் வண்டி பொருட்டு | ரூ. 10.00 |
| v. | ஒவ்வொரு ரிக்ஷோ பொருட்டு | ரூ. 7.50 |
| vi. | ஒவ்வொரு குதிரை, மட்டக்குதிரை அல்லது கோவேறு கழுதை பொருட்டு | ரூ. 15.00 |
| vii. | ஒவ்வொரு யானை பொருட்டு | ரூ. 50.00 |

02. சக்கரங்களின் விட்டம் 26 அங்குலத்திற்கு மேற்படாத சிறுவர் வாகனங்கள், வீல் பெரோ, தனியார் இடங்களில் மாத்திரம் வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தப்படாத கை கரத்தை என்பன இந்த வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

இந்த அட்டவணையில் "வர்த்தக நோக்கம்" என்பது, ஏதேனும் வியாபாரம் அல்லது கைத்தொழில் தொடர்பாக, விற்பனைக்கேனும் ஏனைய பணிகள் பொருட்டேனும், ஏதேனும் பொருள் அல்லது பண்டம் அல்லது ஏதேனும் எழுத்திலான அல்லது அச்சிட்ட கொண்டுசெல்லுதல் அல்லது போக்குவரத்துசெய்தல் என்பன அடங்கும்.

12-211/5

---

## புத்தளம் நகர சபை

### அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரிவிதித்தல் - 2025

எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,
செயலாளர் (பதில் கடமை).
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2024, நவெம்பர் 27.

**தீர்மானம்**

255 ஆவது அதிகாரம் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 165 'ஆ' பிரிவின் (1) ஆவது உப பிரிவின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட துணை விதிகளது ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது குறித்த சட்டத்தின் 165 (அ) பிரிவின் கீழ் ஏதும் வரிகளைக் செலுத்தவோ தேவையில்லாத தொழில்களைக் கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு வரும் பின்வரும் அட்டவணையின் நிரல் 1 இல் காட்டப்பட்டுள்ள ஏதும் கைத்தொழிற் கருமங்களை நடத்திச் செல்வதற்கென வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் மீது 2024 ஆம் ஆண்டின் பெறுகைகளுக்கு அமைவான தொகைக்கு ஏற்றவாறு நிரல் 11 இல் காட்டப்பட்டுள்ள ஏதும் எல்லைக்குள் வரும் சந்தர்ப்பத்தின்போது இதற்கமைவான வருடாந்த வரியொன்று 2025 ஆம் ஆண்டுக்கென விதிக்கப்பட வேண்டுமென நான் தீர்மானித்துள்ளேன்.

2024 ஆம் ஆண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரியை அந்த வருடத்தின் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நகரசபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 165 (ஆ) பிரிவின் கீழ் வியாபாரம் மற்றும் தொழில்கள் மீது விதிக்கப்படும் வரி**

| | தொழிலின் மூலம் ஆண்டின் பெறுகைகள் | செலுத்தவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| I. | ரூபா 6000.00 ரூபாவிற்கு மேற்படாதவிடத்து | இல்லை |
| II. | 6,000.00 ரூபாவை மேற்படுகிறதெனினும் 12,000.00 ரூபாவை மேற்படாத விடத்து | 90.00 |
| III. | 12,000.00 ரூபாவை மேற்படுகிறதெனினும் 18,750.00 ரூபாவை மேற்படாத விடத்து | 180.00 |
| IV. | 18,750.00 ரூபாவை மேற்படுகிறதெனினும் 75,000.00 ரூபாவை மேற்படாத விடத்து | 360.00 |
| V. | 75,000.00 ரூபாவைமேற்படுகிறதெனினும் 1,50,000.00 ரூபாவை மேற்படாத விடத்து | 1,200.00 |
| VI. | 1,50,000.00 ரூபாவிற்கு மேல் | 3,000.00 |

**வர்த்தகங்களும் தொழில்களும்**

1. கணக்காய்வு செய்யும் நிறுவனம்
2. ஏல விற்பனையாளர்கள்
3. போக்குவரத்து சேவைகள்
4. கணக்காளர்கள் நிறுவனம்
5. தரகர்கள்
6. நகை அடகு பிடித்தல்
7. காப்புறுதி முகவர்கள் நிறுவனம்
8. நில அளவையாளர் தொழில்
9. ஒப்பந்தக்காரர்கள்
10. வழங்குநர்கள்
11. தொலைபேசிப் பரிவர்த்தனைக் கோபுரம்
12. வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
13. இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப்பாகங்களது விற்பனை
14. குடிவகை (மதுபானச் சாலை /தயாரிப்பும் மொத்த வியாபாரமும்)
15. தனியார் மருத்துவமனை
16. சிகரெட் மொத்த விற்பனை
17. தொலைபேசிச் சேவைகள் விற்பனை /தொடர்புகள் வழங்குதல்
18. மோட்டார் வாகனம் /மோட்டார் சைக்கிள் /முச்சக்கர வண்டி விற்பனை
19. குதிரைப்பந்தயம் ஏற்கும் முகவர் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல்
20. வெளிநாட்டுப் பயண ஏற்பாட்டு நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல்
21. வர்த்தக முகவர் நிலையம் நடத்துதல்
22. குத்தகை விற்பனை நிலையம் (லீசிங்) நடத்துதல்
23. மருத்துவ இரசாயன ஆய்வுகூடம் நடத்துதல்
24. தனியார் கல்வி நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல்
25. தனியார் பாதுகாப்புச் சேவையொன்றை நடத்துதல்
26.வரவேற்பு மண்டப வசதிகள் வழங்குதல்
27. வர்த்தக விளம்பரச் சேவைகளை வழங்கும் நிலையம் நடத்துதல்
28. வாகனப் புகை பரிசோதனை நிலையம் நடத்துதல்
29. வாகன ஓட்டுநர் பயிற்சி நிலையம் நடத்துதல்
30. சர்வதேசப் பாடசாலையொன்றை நடத்துதல்
31. இரத்தினக் கற்கள் கொள்வனவும்/விற்பனையும்
32. ஆதனங்கள் கொள்வனவும் விற்பனையும்
33. குடிசார் பொறியியலாளர் சேவைகள் வழங்குதல்
34. இணையதளம் ஊடாக வரி /கணக்காய்வு ஆலோசனைகள் வழங்குதல்
35. உள்நாட்டு /வெளிநாட்டு நிதி /வரி ஆலோசனைச் சேவை வழங்குதல்
36. பெயின்டிங் மை கலவை வர்த்தகம்
37. உள்ளக விளையாட்டரங்கம் நடத்துதல்
38. ஏற்றுமதி /இறக்குமதிப் பொருட்கள் சேவை வழங்குதல்
39. உள்நாட்டு சுற்றுலா, உள்நாடடு வெளிநாட்டு சுற்றுலா போக்குவரத்து சேவையை நடத்துதல்
40. தொழிற்சாலையொன்றை நடத்துதல்
41. விமான டிக்கற் விற்பனை
42. உதவு வகுப்புகள் நடத்துவதற்கென மண்டப வசதிகள் வழங்குதல்
43. சுற்றுலா வீசா வழங்கும் சேவை
44 கூரியர் சேவை நடத்துதல்
45 இணைதளம் ஊடாகப் பொருட்கள் சேவைகள் வழங்குதல்
46 மொத்த வியாபாரம் நடத்துதல்
47 நிதி நிறுவனம் நடத்துதல் (பண வைப்புகள் பெறுதல் /ஆதனங்களை ஈடாக வைத்துப் பணம் கடன் கொடுத்தல்)

48. ஐரோப்பிய மருத்துவ நிலையம் நடத்துதல்
49. கணினி /கணினி உபகணரங்கள் விற்பனை நிலையம் நடத்துதல்
50. மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் நடத்துதல்
51. மிதிவண்டி விற்பனை நிலையம் நடத்துதல்
52. இயந்திராதிகள் /உதிரிப் பாகங்கள் விற்பனை
53. மதின உபகரண்கள் /தையல் மெசின் விற்பனை நிலையம் நடத்துதல்
54. விசேடத்துவ மருத்துவ சேவை நிலையம் நடத்துதல்
55. பற்சிகிச்சை நிலையம் நடத்துதல்
56.தரையோடுகள் (மாபிள் செங்கற்கள்) விற்பனை
57. மரத்தினாலான வீட்டுத் தளபாட விற்பனை நிலையம் நடத்துதல்
58. விற்பனைக்காக மணம் களஞ்சியம் செய்து வைத்திருத்தல்
59. ஐரோப்பிய மருந்துகள் விற்பனை நிலையம் நடத்துதல்
60. புத்தக விற்பனை நிலையம்நடத்துதல்
61. தங்கநகை விற்பனை நிலையம் நடத்துதல்
62. ரெக்சின் துணி விற்பனை நிலையம் நடத்துதல்
63. இறுதிச்சடங்கு சேவை நிலையம் நடத்துதல்
64. மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம் நடத்துதல்
65. திட்ட வரைஞர் நிலையம் நடத்துதல்
66. வாகனங்கள் வாடகைக்கு விடும் நிலையம் நடத்துதல்
67. தைத்த ஆடைகள் விற்பனை நிலையம் நடத்துதல்
68. கேபள் தொலைக்காட்சி அலைவரிசை சேவை வழங்கும் நிலையம் நடத்துதல்
69. பாவித்த இயந்திரங்கள் அல்லது உதிரப்பாகங்கள் கொள்வனவும் விற்பனையும்
70. கட்டுடற் பயிற்சி நிலையம் நடத்துதல்
71. குளியலறை உபகரணங்கள் மற்றும் அதன் துணை உபகரணங்களை விற்பனை செய்தல்
72 விளையாட்டு உபகரணங்களது விற்பனை
73. புகைப்படத் தயாரிப்பு நிலையம் நடத்துதல்
74. பாதணிகளது தயாரிப்பு அல்லது பழுதுபார்ப்பும் விற்பனையும்
75. தென்னஞ் சலாகை மடுவத்தை நடத்துதல்
76. ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம் நடத்துதல்
77. மங்கள, அவமங்கல உபகரணங்களது வாடகை நிலையம் நடத்துதல்
78. மருத்துவ உபகரணங்களது விற்பனை
79. கண்ணாடி மற்றும் அலுமினியப் பொருட்கள் விற்பனை
80. முகவர் தபால் நிலையம் நடத்துதல்
81. சிறு ஏற்றுமதிப் பயிர் விளைபொருள் மொத்தக் கொள்வனவு நிலையம் நடத்துதல்
82. அலுமினியப் பொருத்திகள் விற்பனை
83. பிளாஸ்டிக் தளபாட விற்பனை
84. அஸ்பெஸ்டோ, சீலிங் தகடுகள் விற்பனை
85. உருக்கு தளபாட விற்பனை
86. வழுக்கி எண்ணெய்கள் விற்பனை நிலையம் நடத்துதல்
87. பிலியட்ஸ் உள்ளக விளையாட்டு மேசை நடத்துதல்
88. வாகன உள்ளக அலங்கரிப்பு மற்றும் கருவிகள் விற்பனை
89. எரிவாயு அடுப்பு அல்லது உபகரணங்கள் விற்பனை
90. மின் உபகரணங்கள் உதிரிப் பாகங்கள் விற்பனை
91. கைத் தொலைபேசி விற்பனை
92. அரிமர விற்பனை நிலையம் நடத்துதல்
93. நீர் பம்பி, அரைக்கும் இயந்திரங்கள் விற்பனை நிலையம் நடத்துதல்
94. பகல்நேரப் பாதுகாப்பு நிலையம் நடத்துதல்
95. பெயின்ட் மற்றும் வார்ணிஷ் விற்பளை
96. லொத்தர் சீட்டு விற்பனை முகவர் நிலையம்

97. திருமண ஆடைகள் ஆபரணங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனம் நடத்துதல்
98. இயற்கையான பூக்கள் விற்பனை நிலையம் நடத்துதல்
99. பழைய ஆபரணங்களை விற்பனை செய்தல்
100. பூசைப் பொருட்கள் விற்பனை, அட்டபிரிகர விற்பனை செய்தல்
101.பொலித்தின் /மெழுகுச்சிலை /றப்பர் பொருட்கள் விற்பனை செய்தல்
102. உள்நாட்டு தொழில் முகவர் நிலையம் நடத்துதல்
103. வாடிவீடு நடத்துதல்
104. வாகன பற்றரி விற்பனை செய்தல்
105. பாதுகாப்புப் பிரிவின் சீருடைப் பொருட்களது விற்பனை
106. டயர் மற்றும் ரியூப் விற்பனை
107. திரைச்சீலை விற்பனை செய்தல

12- 127/4

---

**கம்பளை நகர சபை**

வாகனங்கள் மற்றும் விலங்குகளுக்கான வரி விதித்தல் - 2025

2018.03.05 ஆம் திகதிய 2061/4 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய 2018.03.20 ஆந் திகதி தொடங்கி 2022.03.19 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த உறுப்பினர்களது பதவிக் காலம் 2022.01.10 ஆம் திகதி 2262/8 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய அது 2023.03.19 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்ட கம்பளை நகர சபையின் உறுப்பினர்களது பதவிக் காலம் 2023.03.19 திகதியுடன் முடிவடைந்துள்ளதென்ற உள்ளூராட்சி ஆணையாளரது சிபிசி/சீஎல்ஜி/1/4/3/05 இலக்கம் 2024.08.30 திகதி கொண்ட கடிதத்துக்கமைய 2024.09.02 ஆம் திகதியிலிருந்து கம்பளை நகர சபையின் செயலாளர் பதவியில் பதிலாகக் கடமையாற்றும் எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ ஆகிய நான். 255 ஆவது அதிகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 அ பிரிவுக்கமைய 2024.10.28 ஆம் திகதி கொண்ட 2024/1228 இலக்கத் தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,
செயலாளர் (பதில் கடமை).
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2024, நவெம்பர் 27.

**தீர்மானம்**

கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் 2025 ஆம் ஆண்டில் வரும் பின்வரும் அட்டவணையின் நிரல் 1 இல் காட்டப்பட்டுள்ள ஏதும் வாகனம் /விலங்கு ஒன்றைத் தமது பொறுப்பில் வைத்திருக்கும் ஒவ்வொருவர் மீதும் நிரல் 11 இல் காட்டப்பட்டுள்ள வரியை 2025 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுதல் வேண்டுமென நான் தீர்மானித்துள்ளேன்.

| | நிரல் I | நிரல் II<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | மோட்டார் கார், முச்சக்கர மோட்டார் சைக்கிள், வண்டி, கை வண்டி, ரிக்ஷோ, மிதிவண்டி, ட்ரை சைக்கிள் அல்லாத ஒவ்வொரு வாகனத்துக்கும் | 25.00 |
| 2. | அனைத்து மிதிவண்டிகள் அல்லது ட்ரை சைக்கிள்கள் அல்லது சைக்கிள் கார்கள், அல்லது சைக்கிள் வண்டி, அல்லது ட்ரை சைக்கிள் கார் வண்டி அல்லது ட்ரை சைக்கில் வண்டிகள் | |
| | (அ) அது வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாயின் | 10.00 |
| | (ஆ) அது வர்த்தகம் அல்லாத தேவையில் உள்ளதாயின் | 5.00 |

| | நிரல் I | நிரல் II<br>ரூ. ச. |
|---|---|---|
| (i) | ஒவ்வொரு வண்டிலுக்கும் | 20.00 |
| (ii) | ஒவ்வொரு கை வண்டிலுக்கும் | 10.00 |
| (iii) | ஒவ்வொரு ரிக்ஷாவிற்கும் | 7.50 |
| (iv) | ஒவ்வொரு குதிரைக்கும், போனிக்கும், கோவேறு, கழுதைக்கும் | 15.00 |
| (v) | ஒவ்வொரு யானைக்கும் | 50.00 |

12 - 127/ந

---

**கம்பளை நகர சபை**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி விதித்தல் - 2025

255 ஆவது அதிகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 165 ஈ பிரிவுக்கமைய கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் காணப்படும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கென குறித்த காணியின் முதலீட்டு நிலப் பெறுமதியின் 0.5% ஆன வரியொன்றை 2025 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடப்பட வேண்டுமெனவும், குறித்த வரியின் கருமங்களுக்கென 165 இ (1) (ஆ) இணைப் பகுதியின் கீழ் வரும் சம விகிதமெனக் குறித்த காணியின் கட்டடங்கள் அமைந்துள்ள நில அளவு மற்றும் முழுக் காணியின் அளவுக்கும் இடையில் 1:10 விகிதமாக அது இருத்தல் வேண்டுமெனவும் 2024.10.08 ஆம் திகதி 2024/1228 இலக்கத் தீர்மானத்தின் கீழ் தீர்மானித்துள்ளேன்.

எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,
செயலாளர் (பதில் கடமை).
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2024, நவெம்பர் 27.

12-127/6

---

**கம்பளை நகர சபை**

விளம்பர அறிவித்தல்கள் பவகைகள் கட்டணம் - 2025

2018.03.05 ஆம் திகதிய 2061/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய 2018.03.20 திகதி தொடங்கி 2022.03.19 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த உறுப்பினர்களது பதவிக் காலம் 2022.01.10 ஆம் திகதிய 2262/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய அது 2023.03.19 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்ட கம்பளை நகர சபையின் உறுப்பினர்களது பதவிக் காலம் 2023.03.19 திகதியுடன் முடிவடைந்துள்ளதென்ற உள்ளூராட்சி ஆணையாளரது சிபிசி/சீஎல்ஜீ/1/4/ந/05 இலக்க 2024.08.30 திகதி கொண்ட கடிதத்துக்கமைய 2024.09.02 ஆம் திகதியிலிருந்து கம்பளை நகர சபையின் செயலாளர் பதவியில் பதிலாகக் கடமையாற்றும் எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ ஆகிய நான், 255 ஆவது அதிகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 அ பிரிவுக்கமைய 2024.10.28 ஆம் திகதி கொண்ட 2024/1228 இலக்கத் தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,
செயலாளர் (பதில் கடமை).
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2024, நவெம்பர் 27.

**தீர்மானம்**

கம்பளை நகரசபையின் நிருவாக எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் வர்த்தக விளம்பர அறிவித்தலகள் மீது பின்வரும் வகையில் விளம்பர அறிவித்தல் வரியொன்று 2025 ஆம் ஆண்டுக்கென விதிக்கப்பட வேண்டுமென நான் தீர்மானித்துள்ளேன்..

**விளம்பர அறிவித்தல்கள்**

01. துணி /மெழுகுசீலைப் பதாதைகளைக் காட்சிப்படுத்துதல்

| | | | ரூ. ச. |
|---|---|---|---|
| i. | 03 நாட்கள் | 01 சதுர அடி | 50.00 |
| ii. | 03 - 07 நாட்கள் | 01 சதுர அடி | 75.00 |
| iii. | 07 - 14 நாட்கள் | 01 சதுர அடி | 100.00 |
| | | | உச்ச கால எல்லை 2 வாரங்கள் |

02. சுவரொன்றில் வரைதல்

| | | | |
|---|---|---|---|
| i. | ஒரு வருடத்துக்கு | 01 சதுர அடிக்கு | 100.00 |

03. நிரந்தர வர்த்தக விளம்பரத்தைக் காட்சிப்படுத்துதல்

| | | | |
|---|---|---|---|
| i. | ஒரு வருடத்துக்கு | 01 சதுர அடிக்கு | 100.00 |

04. மின்னொளி பாய்ச்சும் விளம்பரப் பலகையைக் காட்சிப்படுத்துதல்

| | | | |
|---|---|---|---|
| i. | ஒரு வருடத்துக்கு | 01 சதுர அடிக்கு | 200.00 |

05. நகர சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் பாதைகளில் விளம்பர அறிவித்தல்களையும் நிரந்தர அறிவித்தல்களையும் பொருத்துவதற்கான அனுமதிக்கான வருடாந்தக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். (நீளம் 8 அடியைத் தாண்டக்கூடாது)

06 மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கென தரைப்பகுதியை ஒதுக்கிடுவதற்கான கட்டணம் அறவிடுதல்

| | | | |
|---|---|---|---|
| புகையிரத நிலைய வீதி வாடிவீட்டுக்கு எதிரில் | நாளொன்றுக்கு 1 | 1சதுர அடிக்கு | ரூ. 80.00 |
| கடுகன்னால வீதி | நாளொன்றுக்கு 1 | 1சதுர அடிக்கு | ரூ. 50.00 |

அரசாங்கம் விதிக்கும் வரித்தொகை இருப்பின் அதனையும் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

12-127/7

---

**கம்பளை நகர சபை**

சான்றிதழ்கள்/விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் அறவிடுதல் - 2025

2018.03.05 ஆம் திகதி 2061/4 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய 2018.03.20 திகதி தொடங்கி 2022.03.19 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த உறுப்பினர்களது பதவிக் காலம் 2022.01.10 ஆம் திகதி 2262/8 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய அது 2023.03.19 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்ட கம்பளை நகர சபையின் உறுப்பினர்களது பதவிக் காலம் 2023.03.19 திகதியுடன் முடிவடைந்துள்ளதென்ற உள்ளூராட்சி ஆணையாளரது சிபிசி/சீஎல்ஜீ/1/4/3/05 இலக்கம் 2024.08.30 திகதி கொண்ட கடிதத்துக்கமைய 2024.09.02 ஆம் திகதியிலிருந்து கம்பளை நகர சபையின் செயலாளர் பதவியில் பதிலாகக்

கடமையாற்றும் எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ ஆகிய நான். 255 ஆவது அதிகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 அ பிரிவுக்கமைய 2024.10.28 ஆம் திகதி கொண்ட 2024/1228 இலக்கத் தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,
செயலாளர் (பதில் கடமை).
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2024, நவெம்பர் 27.

**தீர்மானம்**

255 ஆவது அதிகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கம்பளை நகரசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் வழங்கப்படும் அட்டவணை 07, 08 மற்றும் 09 இல் காட்டப்பட்டுள்ள சேவைகளுக்கெனவும், சான்றிதழ்கள்,விண்ணப்பப் படிவங்கள் என்பவற்றை வழங்குவதன் மீதும் பின்வரும் வகையில் கட்டணங்களை அறவிடுவதென நான் தீர்மானித்துள்ளேன். உரிய கட்டணங்கள் 2025 சனவரி 01 முதல் திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

**அட்டவணை - 07**

| | | ரூ. ச. |
|---|---|---|
| **01.** | **நகர சபை மண்டபத்தை வாடகைக்கு விடுதல்** | |
| i. | வர்த்தக நடவடிக்கைகளுக்கென 01 நாளில் | ரூ. 10000.00 |
| ii. | வர்த்தகம் அல்லாத நடவடிக்கைகளுக்கென 01 நாளில் | ரூ. 4000.00 |
| iii. | உணவகம் - ஒரு நாளில் | ரூ. 1000.00 |
| iv. | நகரசபை வைப்புத் தொகை | ரூ. 5000.00 |
| | இதற்கு மேலதிகமாக மண்டபப் பொறுப்பாளர் கட்டணமும் செலுத்தப்படுதல் வேண்டும். | |
| i. | விடுமுறை அல்லாத ஒரு நாளுக்கு | ரூ. 300.00 |
| ii. | விடுமுறை நாட்களில் ஒரு நாளுக்கு | ரூ. 500.00 |
| v. | நகரசபை சனசமூக மண்டபத்தை வாடகைக்கு வழங்குதல் - 01 நாளில் வெளியார் தரப்பினருக்கு (வர்த்தக நடவடிக்கைகளுக்கென) | ரூ. 1500.00 |
| **02.** | **புதிய கேட்போர் கூடத்தை வாடகைக்கு விடுதல்** | |
| i. | வர்த்தக நடவடிக்கைகளுக்கென 01 நாளில் | ரூ. 6000.00 |
| ii. | வர்த்தகம் அல்லாத நடவடிக்கைகளுக்கென 01 நாளில் | ரூ. 4000.00 |
| iii. | புதிய கோட்போர் கூடம் வைப்புத் தொகை | ரூ. 5000.00 |
| | இதற்கு மேலதிகமாக மண்டபப் பொறுப்பாளர் கட்டணமும் செலுத்தப்படுதல் வேண்டும். | |
| i. | விடுமுறை அல்லாத நாட்களில் | ரூ. 300.00 |
| ii. | விடுமுறை நாட்களில் | ரூ. 500.00 |
| 03. i. | சிறுவர் பூங்கா நுழைவுக் கட்டணம் | ரூ. 20.00 |
| ii. | பொது மலசலகூடக் கட்டணம் | ரூ. 20.00 |
| 04. | விண்ணப்பப்படிவம் /சான்றிதழ் கடிதங்கள் கட்டணம் | |
| (i) | கட்டட விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 1000.00 |
| (ii) | காணி உறுதி சுருக்கப் பிரதி (A.T.D.) படிவக் கட்டணம் | ரூ. 250.00 |

| | | |
|---|---|---|
| (iii) | சுற்றாடல் சான்றிதழ் விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 1000.00 |
| (iv) | சுற்றாடல் சான்றிதழ் புதுப்பிக்கும் படிவக் கட்டணம் | ரூ. 500.00 |
| (v) | வீதிரேகைச் சான்றிதழ் கட்டணம் | ரூ. 1250.00 |
| (vi) | ஒப்பந்த இணக்கப் படிவங்கள் | ரூ. 1000.00 |
| (vii) | மிதிவண்டி அனுமதிப்பத்திர விண்ணப்பப் படிவம் | ரூ. 100.00 |
| (viii) | மிதிவண்டி அனுமதிப்பத்திரக் கட்டணம் | ரூ. 5.00 |
| (ix) | சான்றிதழ்கள் கட்டணம் (அனுமதிப்பத்திரங்கள் /கடை வாடகை/ வீட்டு வாடகை (ஒரு வருடத்துக்கானது) | ரூ. 100.00 |
| (x) | ஏனைய சான்றிதழ்கள் அல்லது கடிதங்கள் வழங்கும் கட்டணம் | ரூ. 250.00 |
| (xi) | காணி இணைபிரிப்பு படிவக் கட்டணம் | ரூ. 200.00 |
| (xii) | தகவுச் சான்றிதழ் படிவக் கட்டணம் | ரூ. 150.00 |
| (xiii) | முன்பள்ளிக்கான தரச் சான்றிதழ் கட்டணம் | ரூ. 3000.00 |

05. கால்நடை அறுவை நிலையக் கட்டணம்

| | |
|---|---|
| மாடு ஒன்றுக்கானது | ரூ. 1000.00 |
| ஆடு செம்மளி ஆடு ஒன்றுக்கானது | ரூ. 1000.00 |

சமய/தனிப்பட்ட விழாக்களுக்கான கட்டணம்

| | |
|---|---|
| மாடு ஒன்றுக்கானது | ரூ. 3500.00 |
| ஆடு /செம்மறி ஆடு ஒன்றுக்கானது | ரூ. 3500.00 |
| வெளியிலிருந்து இறைச்சி கொண்டுவரும் கட்டணம் | ரூ. 10.00 |

06. கம்பளை நிதஹஸ் மாவத்தையின் வாரச் சந்தையில் 20 சதுர அடி (5' X 4')
வெற்றுத் தரைக்கான ஒரு நாள் கட்டணம் ரூ. 200.00

கம்பளை நிதஹஸ் மாவத்தையின் வாரச் சந்தையில்
வர்த்தகம் செய்யும் லொறி வண்டிக்கான ஒரு நாள் கட்டணம் ரூ. 250.00

அரசாங்கம் விதிக்கும் வரிகள் இருப்பின் அவற்றையும் இத்தொகையுடன் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

**அட்டவணை - 08**

| | வீகுலவத்த விளையாட்டு மைதானக் கட்டணம் | நாளொன்றுக்கான கட்டணம் |
|---|---|---|
| 1. | விளையாட்டு மைதானத்தை மட்டும் பாடசாலைகளுக்கென (நகரசபை எல்லைக்குள்) | ரூ. 4000.00 |
| | நகர சபையின் எல்லைக்கு வெளியில் ஏனைய பாடசாலைகளுக்கு | ரூ. 5000.00 |
| | சர்வதேசப் பாடசாலைகளுக்கு 01 நாளைக்கு | ரூ. 7500.00 |
| | பாடசாலைகள் அல்லாதவை (ஒரு நாளில்) | ரூ. 12000.00 |
| | (ஒரு மணி நேரத்தில்) குறைந்தது 2 மணி நேரமாக இருத்தல் | ரூ.1500.00 |
| 2. | வளி சீராக்கப்பட்ட பார்வையாளர் மண்டப மேற்பகுதி | ரூ. 7500.00 |
| | பார்வையாளர் மண்டபத்தின் மேல் மாடியைப் பயன்படுத்துவதாயின் வைப்புப் பணம் | ரூ. 5000.00 |
| 3. | ஊடகவியலாளர் அறைகள் | ரூ. 3000.00 |
| 4. | மருத்துவர்களது அறைகள் | ரூ. 3000.00 |

| | |
|---|---|
| *வீகுலவத்த விளையாட்டு மைதானக் கட்டணம்* | *நாளொன்றுக்கான கட்டணம்* |
| 5. நடுவர்களது அறைகள் | ரூ. 3000.00 |
| 6. ஓய்வு அறைகள் | ரூ.3000.00 |
| 7. இல. 03, 04, 05 என்பவற்றுக்கென ஒரு மணி நேரத்துக்கு | ரூ. 1000.00 |
| 8. மேற்குறித்த 1,2,3,4,5,6 அனைத்தையும் வேண்டினால் 10% கழிவு வழங்கப்படும் | |
| 9. பயிற்சி நடவடிக்கைகளுக்கென 1 மணி நேரத்துக்கு | |
| பாடசாலைகள் | ரூ. 300.00 |
| சர்வதேசப் பாடசாலைகள் | ரூ. 600.00 |
| விளையாட்டுக் கழகங்கள் | ரூ. 600.00 |
| 10. வீகுலவத்த மைதானத்தை சுத்திகரிப்பது | ரூ. 500.00 |
| 11. 1. வீகுலவத்த மைதானம் தவிர்ந்த ஏனைய விளையாட்டு மைதானங்களுக்கென | |
| அ. விளையாட்டுப் போட்டிகளுக்கென ஒரு நாளைக்கு | ரூ. 3000.00 |
| ஆ. ஏனைய கருமங்களுக்கென ஒரு நாளைக்கு | |
| களியாட்டங்களுக்கென | ரூ. 15000.00 |
| ஏனையவற்றுக்கென | ரூ. 10000.00 |

அரசாங்கம் விதிக்கும் வரித்தொகை (VAT) இருப்பின் அத்தொகையும் இதனுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

***நீர்க்குழாய் பதிப்பதற்கெனப் பாதையைப் பழுதாக்குதல்***

| | |
|---|---|
| 01. காப்பட் பாதை | ரூ. 5000.00 |
| 02. முற்கலவை | ரூ. 900.00 |
| 03. கொங்கிறீட் பாதை | ரூ. 700.00 |
| 04. மண் பாதை | ரூ. 150.00 |
| 05. அபாயகரமான மரங்களை வெட்டுவதற்கான முறைப்பாடு | ரூ. 150.00 |

***தண்ணீர் பவுசர் வழங்குதல் (9000 லீற்றர்)***

| | |
|---|---|
| 01. அதிகுறைந்த அளவு 4500 லீற்றராகும் | ரூ.1200.00 |
| 4500-9000 லீற்றர் இடையில் | ரூ. 2400.00 |
| 02. நிரப்பும் கூலி | ரூ. 250.00 |
| 03. ஓட்டுநர் கட்டணம் | |
| (கடமை தவிர்ந்த நேரங்களில் மட்டும்) | ரூ. 200.00 |
| 04. முதலாவது கி. மீற்றருக்கு | ரூ. 900.00 |
| 05. 2 ஆவது கி. மீற்றருக்கு | ரூ. 750.00 |
| 06. சனி, ஞாயிறு தினங்களில் மற்றும் அரச விடுமுறை தினங்களில் | ரூ. 250.00 |
| 07. நகர சபை எல்லைக்கு வெளியே பிரதேசங்களின் சேவைக் கட்டணம் | ரூ. 3000.00 |

***தண்ணீர் பவுசர் வழங்குதல் (3000 லீற்றர்)***

| | |
|---|---|
| 01. தண்ணீர் பவுசருக்கென | ரூ.800.00 |
| 02. நிரப்பும் கூலி | ரூ. 250.00 |
| 03. ஓட்டுநர் கட்டணம் | |
| (கடமை தவிர்ந்த நேரங்களில் மட்டும்) | ரூ. 200.00 |
| 04. முதலாவது கி. மீற்றருக்கு | ரூ. 600.00 |
| 05. 2 ஆவது கி. மீற்றருக்கு | ரூ. 500.00 |
| 06. சனி, ஞாயிறு தினங்களில் மற்றும் அரசவிடுமுறை தினங்களில் | ரூ. 250.00 |

| | |
|---|---|
| 07. நகர சபை எல்லைக்கு வெளியே பிரதேசங்களின் சேவைக் கட்டணம் | ரூ. 3000.00 |
| 08. நகரசபையின் பாதைகளைப் பயன்படுத்துதல் (அனுமதிபெற்ற மணல்/கருங்கல்/மண்) ஒரு கியூபின் கட்டணம் | ரூ. 300.00 |
| 09. நகரசபையின் பாதைகளைப் பயன்படுத்துதல் - மணல் கொண்டு செல்லல் (மாதாந்தம்) | ரூ. 1500.00 |

அரசாங்கம் விதிக்கும் வரித்தொகை (VAT) இருப்பின் அத்தொகையும் இத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

**நினைவுப் படிவக் கட்டணம் அறவிடுதல்** **கட்டணம்**

தகனசாலை மதிலில் நினைவுப் படிகம் அமைத்தல் - நினைவுப் படிகத்தின் அளவு 1 சதுர அடியாகுமெனவும், புகைப்படம் அச்சிடப்பட்ட தரையோட்டைப் படிகத்தில் பொருத்த முடியும்.

| | |
|---|---|
| நகர எல்லைக்குள | ரூ. 15000.00 |
| நகர எல்லைக்கு வெளியில் | ரூ. 25000.00 |

தகனசாலை மதிலில் அமைக்கப்படும் நினைவுப் படிகத்தின் காலத்தைப் புதுப்பித்தல் - 04 வருடங்களுக்கு ஒரு முறை தகனசாலை மதிலில் அமைக்கப்படும் நினைவுப் படிகத்தின் காலத்தைப் புதுப்பிக்கும் கட்டணம்.

| | |
|---|---|
| நகர சபை எல்லைகுள் | ரூ. 10000.00 |
| நகர சபை எல்லைக்கு வெளியில் | ரூ. 15000.00 |

**நல்லடக்கக் கட்டணம் அறவிடுதல்**

| | |
|---|---|
| நகர சபை எல்லைக்குள் | ரூ. 2500.00 |
| நகர எல்லைக்கு வெளியில் | ரூ. 5000.00 |
| வைப்புச் செய்தல் (இறந்த உடல் - நகர எல்லை மட்டும்) | ரூ. 75000.00 |
| முதல் சந்தர்ப்பம் | ரூ. 500000.00 |
| இரண்டாம் சந்தர்ப்பம் | ரூ. 15000.00 |

**தகனக் கட்டணம் அறவிடுதல்**

**நகர எல்லைக்குள்**

| | |
|---|---|
| மு. ப. 10.00 | ரூ. 11000.00 |
| பி. ப. 2.00 | ரூ. 11000.00 |
| பி. ப. 4.00 | ரூ. 11000.00 |
| பி. ப. 6.00 | ரூ. 13000.00 |

**நகர எல்லைக்கு வெளியில்**

| | |
|---|---|
| மு. ப. 10.00 | ரூ. 14000.00 |
| பி. ப. 2.00 | ரூ. 14000.00 |
| பி. ப. 4.00 | ரூ. 14000.00 |
| பி. ப. 6.00 | ரூ. 15000.00 |

**விறகுச் சுதையில் தகனத்துக்கென**

| | |
|---|---|
| நகர எல்லைக்குள் | ரூ. 5000.00 |
| நகர எல்லைக்கு வெளியில் | ரூ. 10000.00 |
| மரணச்சடங்கு மண்டபக் கட்டணம் - ஒரு நாளில் | ரூ. 20000.00 |
| வைப்புத் தொகை | ரூ. 5000.00 |
| ஒரு நாளின் 24 மணிநேரம் கடந்த பின்னர் 6 மணி நேரம் தாண்டுமெனின் 24 மணி நேரத்துக்கும் குறைவான காலத்தில் உடலை வைத்திருப்பதற்காக அறவிடப்படும் கட்டணம் | ரூ. 10000.00 |

2005 ஆம் ஆண்டில் கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் வர்த்தக நிலையங்களுக்கெனச் செயற்படுத்தப்படவுள்ள கழிவுப்பொருட் கட்டணப் பட்டியல்

| தொ. இல. | வர்த்தகத்தின் வகை | ஒரு நாளில் 0-5 கி.கிராம் வரை சேருமெனின் மாதாந்தம் அறவிடப் படும் கட்டணம் ரூ. | ஒரு நாளில் 6-10 கி. கிராம் வரை சேருமெனின் மாதாந்தம் அறவிடப் படும் கட்டணம் ரூ. | ஒரு நாளில் 11-20 கி. கிராம் வரை சேரு மெனின் மாதாந்தம் அறவிடப் படும் கட்டணம் ரூ. | ஒரு நாளில் 21-30 கி. கிராம் வரை சேரு மெனின் மாதாந்தம் அறவிடப் படும் கட்டணம் ரூ. | ஒரு நாளில் 31-40 கி. கிராம் வரை சேரு மெனின் மாதாந்தம் அறவிடப் படும் கட்டணம் ரூ. | ஒரு நாளில் 41-50 கி. கிராம் வரை சேரு மெனின் மாதாந்தம் அறவிடப் படும் கட்டணம் ரூ. | மாதாந்தம் அகற்றப்படும் எந்தவொரு நிலையத்தினரும் கழிவுகளது மொத்த நிறை 1,500 கி. கிராமைத் தாண்டுமெனின் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடைகள், அலுவலகங்கள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 2 | ஹோட்டல்கள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 3 | காய்கறி பழவகைக் கடைகள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 4 | இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனை நிலையங்கள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 5 | நடைபாதை வர்த்தகம் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 6 | தனியார் மருந்தகங்கள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 7 | தொழிற்சாலைகள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 8 | அகழ்வுகள், நிருமாணங்கள் மற்றும் கழிவுத் துகள்கள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |
| 9 | சுப்பர் மார்க்கட்டுகள் | 300.00 | 400.00 | 500.00 | 2500.00 | 5000.00 | 20000.00 | 25000.00 |

10. பொலித்தின் கலந்த கழிவுகளைச் சேகரிக்கும் கட்டணம் 1 கி. கிராமுக்கு ரூ. 50.00

மாடு அறுவை நிலையக் கட்டணம்

ஒரு மாட்டுக்கானது ரூ. 1000.00
ஒரு ஆட்டுக்கு /செம்மறி ஆட்டுக்கானது ரூ.1000.00

வெளியிலிருந்து மாட்டிறைச்சி கொண்டுவருவதற்கானது ரூ.10.00

கம்பளை நகர சபையின் நிருவாகப் பிரிவுக்குள் உக்கலடையாத கழிவுப் பொருளுக்கென 1 கி.கிராமுக்கு கட்டணம் ரூ. 50.00

**அட்டவணை - 09**

*பொது நூலகங்கள் சேவைக் கட்டணம் அறவிடுதல்*

**சிறுவர் பிரிவு**

| | |
|---|---|
| உறுப்புரிமை வைப்புத் தொகை (நகரசபை எல்லைக்குள்) | ரூ. 100.00 |
| சேவைக்கட்டணம் (நகரசபை எல்லைக்குள்) | ரூ. 100.00 |
| உறுப்புரிமை வைப்புத் தொகை (நகரசபை எல்லைக்கு வெளியில்) | ரூ. 200.00 |
| சேவைக்கட்டணம் (நகரசபை எல்லைக்கு வெளியில்) | ரூ. 150.00 |

**உறுப்புரிமையைப் புதுப்பித்தல்**

| | |
|---|---|
| நகரசபை எல்லைக்குள் | ரூ. 100.00 |
| நகரசபை எல்லைக்கு வெளியில் | ரூ. 50.00 |
| விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 20.00 |
| தாமதக் கட்டணம் - ஒரு நாளில் (ஒரு புத்தகத்துக்கு) | ரூ.2.00 |

**வளர்ந்தோர் பிரிவு**

| | |
|---|---|
| உறுப்புரிமை வைப்புத் தொகை (நகரசபை எல்லைக்குள் ) | ரூ. 200.00 |
| சேவைக் கட்டணம் (நகரசபை எல்லைக்குள்) | ரூ. 150.00 |
| உறுப்புரிமை வைப்புத் தொகை (நகரசபை எல்லைக்கு வெளியில்) | ரூ. 300.00 |
| சேவைக்கட்டணம் (நகரசபை எல்லைக்கு வெளியில்) | ரூ. 200.00 |

**உறுப்புரிமையைப் புதுப்பித்தல்**

| | |
|---|---|
| நகரசபை எல்லைக்குள் | ரூ. 150.00 |
| நகரசபை எல்லைக்கு வெளியில் | ரூ. 150.00 |
| விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 20.00 |
| தாமதக் கட்டணம் - ஒரு நாளில் (ஒரு புத்தகத்துக்கு) | ரூ.2.00 |

*12-127/8*

---

**கம்பளை நகர சபை**

*வாகனங்ககள் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் விதித்தல் - 2025*

*2018.03.05 ஆம் திகதி 2061/4 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய 2018.03.20 திகதி தொடங்கி 2022.03.19 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த உறுப்பினர்களது பதவிக் காலம் 2022.01.10 ஆம் திகதி 2262/8 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய அது 2023.03.19ஆம் திகதிவரை நீடிக்கப்பட்ட கம்பளை நகர சபையின் உறுப்பினர்களது பதவிக் காலம் 2023.03.19 திகதியுடன் முடிவடைந்துள்ளதென்ற உள்ளூராட்சி ஆணையாளரது சிபிசி/சீஎல்ஜீ/1/4/3/05 இலக்கம் 2024.08.30 திகதி கொண்ட கடிதத்துக்கமைய 2024.09.02 ஆம் திகதியிலிருந்து கம்பளை நகர சபையின் செயலாளர் பதவியில் பதிலாகக் கடமையாற்றும் எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ ஆகிய நான், 255 ஆவது அதிகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 அ பிரிவுக்கமைய 2024.10.28 ஆம் திகதி கொண்ட 2024/1228 இலக்கத் தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்*

*எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,*
*செயலாளர் (பதில் கடமை).*
*கம்பளை நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*கம்பளை,*
*2024, நவெம்பர் 27.*

**தீர்மானம்**

கம்பளை நகரசபையின் நிருவாக எல்லைக்குள் நாளாந்தம் பிரதான வீதிகளில் நிறுத்தி வைக்கப்படும் மற்றும் நகரசபை ஒதுக்கியுள்ள அரசமரத்தடி வாகனத் தரிப்பிடம் மற்றும் பொதுச்சந்தை எதிரில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்கள்மீது பின்வரும் வகையில் வாகனம் நிறுத்திவைக்கும் கட்டணத்தை அறவிடுவதென நான் தீர்மானித்துள்ளேன்.

| | | நகர சபை ஏற்றுக்கொண்ட தரிப்பிடங்களில் மாதத்துக்கு | ஏனைய தரிப்பிடங்களில் நாளாந்தம் ஒரு மணி நேரத்துக்கு | வருடாந்த கட்டணம் |
|---|---|---|---|---|
| i. | பஸ் வண்டி | ரூ. 300.00 | ரூ. 80.00 | - |
| ii. | லொரி வண்டி /திராக்டர் வண்டி | ரூ. 500.00 | ரூ. 80.00 | - |
| iii. | வேன் /கார் /கெப் வண்டி | ரூ. 500.00 | ரூ. 50.00 | - |
| iv. | டிரக்டர் வண்டி | ரூ. 250.00 | ரூ. 80.00 | - |
| v. | முச்சக்கர வண்டி | - | ரூ. 30.00 | ரூ. 2500.0 |
| vi. | மோட்டர் சைக்கிள் | ரூ. 100.00 | ரூ. 20.00 | - |

அரசாங்கம் விதிக்கும் வரிகள் ஏதுமிருப்பின் அவற்றையும் இத்துடன் செலுத்துதல் வேண்டும்

12-127/9

---

**கம்பளை நகர சபை**

மலிவு விற்பனைச் சந்தைக் கட்டணம் அறவிடுதல் - 2025

கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் தற்காலிக மலிவு விற்பனைச் சந்தைகளுக்கென அனுமதி வழங்கும்போது,

1. அனுமதி வழங்கப்படும் பொது இடங்களில் ஒரு நாளில் ஒரு சதுர அடிப் பரப்புக்கு ரூ.100.00 வீதம் அறவிட அனுமதி வழங்கவும்,

2. தனியார் இடங்களில் நடத்தப்படும் தற்காலிக மலிவு விற்பனைச் சந்தைகளுக்கென உச்ச அளவில் 14 நாட்கள் வரை அனுமதி வழங்கவும், பின்வரும் வகையில் கட்டணங்களை அறவிடவும் 2023.10.25 ஆம் திகதி, 2023/931 இலக்கத் தீர்மானத்தின் மூலம் நான் தீர்மானித்துள்ளேன்.

| நாட்கள் | அறவீடு |
|---|---|
| 01 | ரூ. 3000.00 |
| 02 - 07 | ரூ.5000.00 |
| 08 - 14 | ரூ.10000.00 |

அங்கு காட்சிப்படுத்தப்படும் கொடிகள், பதாதைகள் என்பவை குறிப்பிட்ட கட்டணம் செலுத்துகைக்கு உட்படும்.

எஸ்.எம்.கே.பி.எஸ். சுபசிங்ஹ,
செயலாளர் (பதில் கடமை).
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2024, நவெம்பர் 27.

12-127/10

## எஹெலியகொட பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2025

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களைச் செயற்படுத்துகின்ற, அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற அதிகாரி ஆகிய எஹெலியகொட பிரதேச சபையின் செயலாளர் ரீ.ஆர்.சீ.கே. குணசேகர ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2025 ஆம் ஆண்டு தொடர்பில் மதிப்பீட்டு வரி விதிப்பு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இருத்தல் வேண்டும் என நான் தீர்மானிக்கின்றேன். அதாவது

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் எஹெலியகொட பிரதேச சபையிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1524 இலக்கமும் 2007.11.16 ஆம் திகதியுமுடைய வர்த்தமான பத்திரிகையின் கீழும் அத்துடன் 1617 இலக்கமும் 2009.08.28 ஆம் திகதியுமுடைய வர்த்தமான பத்திரிகையின் கீழும் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டு உள்ள அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள வீடுகள் கட்டிடங்கள் காணிகள் மற்றும் வரிசை வீடுகள் ஆகியவற்றின் வருடாந்தப் பெறுமதி தொடர்பில் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு 2025 ஆண்டிற்கான மதிப்பீடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அம்மதிப்பீட்டின் படி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்கூறிய ஆதனங்கள் தொடர்பில் மேற்கூறிய மதிப்பீட்டிற்கான வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு பத்து வீத (10மூ) வருடாந்த மதிப்பீட்டுவரி விதிக்கப்பட வேண்டும் எனவும்.

மேலும் 2025 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 31, ஜூன் மாதம் 30, செப்தெம்பர் மாதம் 30 மற்றும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிகளுக்கு முன் அவ்வாறு விதிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு வரி எஹெலியகொட பிரதேச சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும் எனவும் அவ்வாறு வருடாந்த மதிப்பீட்டு வரி 2025 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 31 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன் செலுத்தப்படுமாயின் வருடாந்த மதிப்பீட்டு வரித் தொகையின் நூற்றுக்கு பத்து வீத (10மூ) கழிவும், காலாண்டுகள் அடிப்படையில் ஏற்புடைய மதிப்பீட்டு வரிப் பணத்தொகை பிரதேச சபையின் நிதியத்திற்கு செலுத்தப்படுமாயின் மேற்கூறிய காலாண்டின் முதல் மாதத்தில் ஏற்புடைய பணத்தொகையின் நூற்றுக்கு ஐந்து வீத (5%) கழிவும் எஹெலியகொட பிரதேச சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.

ரீ.ஆர்.சீ.கே. குணசேகர
செயலாளர் மற்றும் அதிகாரங்கள்
செயற்பாடுகள் நிறைவேற்றுகின்ற அதிகாரி
எஹெலியகொட பிரதேச சபை

எஹெலியகொட பிரதேச சபை,
எஹெலியகொட,
2024 நவம்பர் 29.

மதிப்பீட்டு வரி ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கான கட்டணம் ரூபா 250.00

12-155/1

---

## எஹெலியகொட பிரதேச சபை

ஏக்கர் வரி விதித்தல் - 2025

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களை செயற்படுத்துகின்ற அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற அதிகாரி ஆகிய எஹெலியகொட பிரதேச சபையின் செயலாளர் ரீ.ஆர்.சீ.கே. குணசேகர ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ் ஏற்பாடுகளுக்கு அமைய உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் ஏக்கர்

வரி விதிக்கப்படுதல் மற்றும் அறவிடப்படுதல் ஆகிய பணிகளுக்காக விசேட பிரதேசம் ஒன்றாகக் கருதப்படுகின்றமை தொடர்பாக 544(iv) ஆம் இலக்கமும் மற்றும் 1989.02.03 ஆம் திகதியுடைய வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்ட எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள, நிரந்தர அல்லது தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கை ஒன்றின் கீழ் உள்ள ஒரு ஹெக்டயருக்கு மேற்பட்ட ஆனால் ஐந்து ஹெக்டயர்களுக்கு குறைந்த நிரந்தர அல்லது தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தும் ஒவ்வொரு காணி தொடர்பிலும் அக்காணியின் ஒவ்வொரு ஹெக்டயருக்காகவும் 2025 ஆம் ஆண்டிற்காக ரூபா 50.00 வீதமான வருடாந்த ஏக்கர் விரியொன்றை விதித்து அறவிடுவதற்கும் தீர்மானிக்கின்றேன். அக் காணி 5 ஹெக்டாயருக்கு அல்லது அதற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் மேற்படும் ஒவ்வொரு ஹெக்டாயருக்கும் 2025 ஆம் ஆண்டிற்காக ரூபா 10.00 வீதமான வருடாந்த ஏக்கர் வரி ஒன்றை விதித்து அறவிடுவதற்கு நான் தீர்மானிக்கின்றேன்.

2024 ஆம் ஆண்டில் ஏக்கர் வரி தொடர்பாக அடிப்படையாக கொண்ட சரிபார்த்தலானது, 2025 ஆம் ஆண்டு தொடர்பான சரிபார்த்தலாகவும் ஏற்று கொள்வதற்கும் மேலும் 2025 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ள ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் அதற்கு நேரெதிரே குறிப்பிடப்பட்டு உள்ள திகதிக்கு முன் அவ்வாறு விதிக்கப்பட்ட வருடாந்த ஏக்கர் வரி எஹெலியகொட் பிரதேச சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு வருடாந்த ஏக்கர் வரி 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்குமுன் செலுத்தப்படுமாயின் வருடாந்த ஏக்கர் வரித்தொகையின் நூற்றுக்குப் பத்து வீத (10%) கழிவும், அந்த அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டின் முன்பாக நான்காம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன் ஏற்புடைய ஏக்கர் வரித்தொகை ஏஹெலியகொட பிரதேச சபையின் நிதியத்திற்கு செலுத்தப்படுமாயின் ஒரு காலாண்டிற்கு ஐந்து வீத (5%) கழிவும் எஹெலியகொட பிரதேச சபையினால் வழங்கப்பட வேண்டும் எனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் தீர்மானிக்கின்றேன்.

ரீ.ஆர்.சீ.கே. குணசேகர
செயலாளர் மற்றும் அதிகாரங்கள்
செயற்பாடுகள் நிறைவேற்றுகின்ற அதிகாரி
எஹெலியகொட பிரதேச சபை

எஹெலியகொட பிரதேச சபை,
எஹெலியகொட,
2024 நவம்பர் 29.

**அட்டவணை**

| காலாண்டு | செலுத்தப்பட வேண்டிய திகதி உரிமை பெறும் இறுதித் திகதி | 10% கழிவுக்காக பெறும் இறுதித் திகதி | 5% கழிவுக்காக உரிமை பெறும் கடைசித் திகதி |
|---|---|---|---|
| முதலாம் காலாண்டு | மாச்சு மாதம் 31 | சனவரி மாதம் 31 | சனவரி மாதம் 31 |
| இரண்டாம் காலாண்டு | யூன் மாதம் 30 | | ஏப்பிறல் மாதம் 30 |
| மூன்றாம் காலாண்டு | செத்தெம்பர் மாதம் 30 | | யூலை மாதம் 31 |
| நான்காம் காலாண்டு | திசெம்பர் மாதம் 31 | | ஒற்றோபர் மாதம் 31 |

12-155/2

---

**எஹெலியகொட பிரதேச சபை**

வாகனங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பில் வரி விதித்தல் - 2025

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களை செயற்படுத்துகின்ற அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற அதிகாரி ஆகிய எஹெலியகொட பிரதேச சபையின் செயலாளர் ரீ.ஆர்.சி.கே. குணசேகர ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய 147 மற்றும் 148 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பாக ஆண்டு வரியொன்று கீழ் காணும்

அட்டவணைப்படி ஏஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2025 ஆம் ஆண்டு தொடர்பில் விதித்து அறவிட்டுக் கொள்வதற்கு தீர்மானிக்கின்றேன்.

ரீ.ஆர்.சீ.கே. குணசேகர
செயலாளர் மற்றும் அதிகாரங்கள்
செயற்பாடுகள் நிறைவேற்றுகின்ற அதிகாரி
ஏஹெலியகொட பிரதேச சபை

ஏஹெலியகொட பிரதேச சபை,
ஏஹெலியகொட,
2024 நவம்பர் 29.

**அட்டவணை**

| | | ரூபா. சதம் |
|---|---|---|
| மோட்டார் வண்டி, மோட்டார் கார், மோட்டார் லொரி, மோட்டார் சைக்கிள், மாட்டு வண்டி, ஜின் ரிக்ஷோ வண்டி, சைக்கிள் வண்டி அல்லது டிரைசிகிள் வண்டியொன்று அல்லாத எல்லா வாகனங்களுக்கும் | | 25.00 |
| ஒவ்வொரு சைக்கிள் அல்லது டிரைசிகிள் அல்லது சைக்கிள் கார் அல்லது மாட்டு வண்டிக்காக | | |
| (அ) | வியாபார நோக்கமாக உபயோகிக்கப்படுமாயின் | 18.00 |
| (ஆ) | வியாபார நோக்கமாக அல்லாத ஏனைய விவகாரங்களில் உபயோகிக்கப்படுமாயின் | 4.00 |
| | ஒவ்வொரு மாட்டு வண்டிக்காகவும் | 20.00 |
| | ஒவ்வொரு கை வண்டிக்காகவும் | 10.00 |
| | ஒவ்வொரு ரிக்ஷோ வண்டிக்காகவும் | 7.50 |
| | ஒவ்வொரு குதிரை, மட்டக் குதிரை அல்லது கழுதைக்காகவும் | 15.00 |
| | ஒவ்வொரு யானைக்காகவும் | 50.00 |

26 அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சக்கரங்களைக் கொண்ட சிறுவர் வாகனங்கள், வீல்பெரோக்கள், அனேகமாக பிரத்தியேகமான இடங்களில் மாத்திரம் வியாபார நோக்கமாக உபயோகிக்கும் உபயோகிக்கும் கை வண்டிகள் மற்றும் வியாபார நோக்கமாக உபயோகிக்காத கை வண்டிகள் இந்த வரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்படும்.

இந்த அட்டவணையில் "வியாபார நோக்க" என்பதற்கு விற்பனைக்காக அல்லது ஏனையவொரு முறையில் ஏதாவதொரு தொழில் முயற்சி அல்லது கைத்தொழிலுக்கான எவையேனும் பொருட்களை அல்லது எவையேனும் எழுத்து மூலமான அச்சிடப்பட்ட பொருட்களை ஏற்றிச் செல்லுதலும் அல்லது போக்குவரத்து செய்தலும் உட்படும்.

12 - 155 /3

---

**ஏஹெலியகொட பிரதேச சபை**

அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணம் விதித்தல் - 2025

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களை செயற்படுத்துகின்ற அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற அதிகாரி ஆகிய எஹெலியகொட பிரதேச சபையின் செயலாளர் ரீ.ஆர்.சி.கே. குணசேகர ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய 147 மற்றும் 149 ஆம் பிரிவுகளால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்காக

2025 ஆம் ஆண்டு தொடர்பில் அனுமதி பத்திரங்களுக்காக கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணம் விதிக்கப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றேன். அதாவது

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய 147 மற்றும் 149 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சட்டத்தின் 2152/37 இலக்கமும் 2019.12.05 ஆம் திகதியும் கொண்ட அதிவிசேட வர்தமாணப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு ஒப்புடையதான வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டிய இங்கு கீழ்காணும் பட்டியல் இலக்கம் 01 பட்டியல் இலக்கம் 02 பட்டியல் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஓர் வியாபாரம் அல்லது கைத்தொழில் ஒன்றிற்காக பயன்படுத்தப்படும் இடம் அல்லது மனையிடம் ஒன்றை பயன்படுத்துவதற்கு அனுமதி அளித்து அவ் இடம் அல்லது மனையிடத்தின் வருடாந்த பெருமதியின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை 1 இல் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திர கட்டணமொன்று 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டும் எனவும்

மேலும் மேற்கூறிய இடம் ஒன்றில் அல்லது மனையிடம் ஒன்றில் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாச பிரயாணத்துறைச் சபை சட்டத்தின் பிரகாரம் பணிகளுக்காக உல்லாசப் பிரயாணத்துறைச் சபையினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள, அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றாக, சிற்றுண்டிச்சாலை ஒன்றாக, தங்குமிட வசதியளிக்கும் இடம் ஒன்றாக ஆகும்போது அதற்கு ஏற்புடைய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும்போது அவ்விடம் அல்லது அச்சுற்றாடல் தொடர்பில் 2024 ஆம் ஆண்டில் பெற்ற பெறுகைகளில் இருந்து 1% அனுமதிப்பத்திரக் கட்டணமாக 2025 ஆம் ஆண்டு தொடர்பில் விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் எனவும் நான் தீர்மானிக்கின்றேன்.

ரீ.ஆர்.சீ.கே. குணசேகர
செயலாளர் மற்றும் அதிகாரங்கள்
செயற்பாடுகள் நிறைவேற்றுகின்ற அதிகாரி
எஹெலியகொட பிரதேச சபை

எஹெலியகொட பிரதேச சபை,
எஹெலியகொட,
2024, நவம்பர் 29.

**அட்டவணை 01**

| 1 ஆம் நிரல் | 11 ஆம் நிரல் |
|---|---|
| சுற்றாடலின் வருடாந்த பெருமதி 750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | ரூ. 500.00 |
| சுற்றாடலின் வருடாந்த பெருமதி 750.00 ரூபாவிற்கு மேற்பட்ட 1500.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | ரூ. 750.00 |
| சுற்றாடலின் வருடாந்த பெருமதி 1500.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் என்றால் | ரூ. 1000.00 |

**பட்டியல் இலக்கம் 01**

**வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்**

01. காரீயம் துப்பரவு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
02. உர வகைகள் அல்லது இரசாயன உர வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனைக்கு வைத்திருத்தல்.
03. தோல் பொருட்கள் பதனிடுதல்.
04. இறப்பர் உற்பத்தி செய்தல் அல்லது இறப்பர் சீட் வைத்திருத்தல்.

05. இறப்பர் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
06. ஒட்டுப்பால் போன்றவற்றை களஞ்சியப்படுத்தி வைத்தல் அல்லது விற்பனை செய்தல்.
07. சிரட்டைக் கரி அல்லது மரக்கட்டைக் கரி உற்பத்தி செய்தல்.
08. விலங்கு உணவு உற்பத்தி செய்தல்.
09. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
10. புதிய உலோகங்கள் அல்லது பழைய உலோகங்கள் கொள்வனவு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
11. உலோக கழிவுகள் அல்லது உடைந்த துண்டுகள் கொள்வனவு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
12. தளபாடப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது பளபளப்பாக்குதல் (பொலிஸ் பண்ணுதல்).
13. பிரம்புப் பொருட்களை உற்பத்தி செய்தல்.
14. தச்சு வேலை தொழிற்சாலை ஒன்றை நடத்திச் செல்லல்.
15. தேங்காய் மட்டை ஊற வைத்தல் (பதனிடுதல்).
16. தூரிகை வகைகள் உற்பத்தி செய்தல் (பற்தூரிகைகள் தவிர்ந்த).
17. இயந்திரங்கள் மூலமாக மரங்களை அரிதல்.
18. மை வகைகள், வார்னிஸ் வகைகள் அல்லது டிஸ்டெம்பர் உற்பத்தி செய்தல்.
19. நார்களுக்கு நிறமூட்டுதல்.
20. தோல் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
21. இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது மீள் பொதி செய்தல்.
22. கேஸ் மென்டல்கள் உற்பத்தி செய்தல்.
23. பொட்டி உற்பத்தி செய்தல்.
24. மெழுகுவர்த் திகள் மற்றும் விளக்குத்திரி உற்பத்தி செய்தல்.
25. கற்பூர வகைகள் உற்பத்தி செய்தல்.
26. எழுத்து மை, அச்சிடும் மை, ஸ்டென்சில் மை என்பன உற்பத்தி செய்தல்.
27. துணி துவைக்கப் பயன்படுத்தும் நீலம் உற்பத்தி செய்தல்.
28. அரக்கு உற்பத்தி செய்தல்.
29. வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்தல்.
30. பாடசாலை வெண்கட்டிகள் உற்பத்தி செய்தல்.
31. டயர் அல்லது டியுப் வகைகள் உற்பத்தி செய்தல்.
32. டயர் வகைகள் மீள்நிரப்பச் செய்தல்.
33. பாற் பண்ணைகள் அல்லது பால் விற்பனை செய்தல்.
34. சீமெந்து களஞ்சியப்படுத்தி வைத்தல், அஸ்பஸ்டஸ் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
35. சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பஸ்டஸ் சீமேந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல்
36. மணல் கடதாசி வகைகள் உற்பத்தி செய்தல்.
37. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
38. செங்கற்கள் சுடுதல் அல்லது விற்பனை செய்தல்.
39. இயந்திரங்கள் மூலமாக துணி நெய்தல்.
40. ஓடுகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
41. பாவனை செய்யப்பட்ட சாக்குகள், கொல்கலன்கள் (பெரல்கள்) மற்றும் பாத்திரங்கள், சுத்தம் செய்து விற்பனை செய்தல்.
42. இயந்திரங்கள் மூலமாக சீமெந்து புளொக் கற்கள் உற்பத்தி செய்தல்.
43. கறுவாப்பட்டை, ஏலம் போன்றவற்றை உலர வைத்து தயார்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
44. பசை (கம்) வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல்.
45. கிருமிநாசினி வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல்.
46. மின்கலங்கள் (பற்றறிகள்) நிரப்பு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
47. பழைய போத்தல்கள் சேகரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
48. மரணச்சடங்குகளுக்கான ஏற்பாட்டுச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றை நடத்திச் செல்லல்.
49. வீட்டுத் தளபாடங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
50. மாணிக்கக் கற்கள் வெட்டுதல் மற்றும் ஒப்பமிடுதல்.
51. பிரம்புப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
52. இயந்திரங்கள் மூலமாக துணி நெய்யும் தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல்.
53. மா அல்லது மசாலா பொருட்கள் அரைக்கும் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல்.

54. விலங்கு உணவுகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
55. தானிய வகைகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
56. பொலிதீன் வகைகள் அல்லது அதனுடன் தொடர்புபட்ட பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல்.
57. சப்பாத்துக்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
58. மெழுகுவர்திகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
59. வேறு ஏதேனும் வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்.
60. துணி துண்டுகள் விற்பனை செய்தல்

**பட்டியல் இலக்கம் 02**

**அபாயகரமான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்**

01. இயந்திரங்கள் மூலமாக மரங்களை அரிதல்.
02. கொப்பரா உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
03. இயந்திரங்கள் மூலமாக தேங்காய் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் எண்ணெய் வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
04. பஞ்சு களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட உற்பத்திகளை தயார்படுத்தி விற்பனை செய்தல்.
05. தீப்பெட்டி வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
06. மெதிலேடட் ஸ்பிரிட் உற்பத்தி செய்தல்
07. தென்னை நார் அல்லது வேறு வகையாக நார் வகைகள் உற்பத்தி செய்தல்.
08. தென்னை நார் அல்லது வேறு வகையாக நார் வகைகளை பயன்படுத்தி பொருட்கள் உற்பத்தி செய்தல்.
09. பாவிக்கப்பட்ட ஆடை வகைகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
10. தங்க நகைகள் உற்பத்தி செய்தல் அல்லது பழுதுபார்த்தல்.
11. விறகு விற்பனை செய்தல்.
12. ஓடு வகைகள் மற்றும் செங்கல் வகைகள் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் விற்பனை செய்தல்.
13. வாகன டயர்கள் மற்றும் டியுப்கள் விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தி வைத்தல்.
14. மரம் சார்ந்த பலகை வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் மரத் தூள் சார்ந்த உற்பத்தி வகைகள்.
15. கார்ட்போட் மற்றும் கடதாசி பயன்படுத்தி செய்யப்படும் உற்பத்திகள் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் விற்பனை செய்தல்.
16. கருங்கல் மற்றும் கற் துண்டுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள்.
17. களிமண் மற்றும் களிமண் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள்.
18. தயாரிக்கப்பட்ட ஆடைகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.
19. இரசாயனப் பொருட்கள் சார்ந்த துணி வகைகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.
20. ஆடை சலவைத் தொழில் செய்யும் இடங்கள்.
21. பீடி வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
22. வாகனங்களை பழுதுபார்த்து நிறப்பூச்சுக்கள் பூசும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
23. வாகனங்களின் உடற் பாகங்களை பழுதுபார்த்து நிறப்பூச்சுக்கள் பூசும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
24. வாகனங்களை சீராக்கம் (சர்விஸ்) செய்யும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
25. அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
26. பழைய பத்திரிகைகள் அல்லது கடதாசிகள் சேகரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
27. சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டர் வாகனங்கள் பழுது பார்த்தல்.
28. விசிறிகளுக்கு நிறப்பூச்சு பூசுதல்.
29. வான வேடிக்கைகள் மற்றும் பட்டாசு வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
30. உலோக கலாச்சார தொழில் முயற்சிகள் இயந்திங்கள் மற்றும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி செய்தல்.
31. வேறு ஏதேனும் அபாயகரமான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்.
32. எரிபொருள் நிரப்பு நிலையங்கள்.

**பட்டியல் இலக்கம் 03**

**அபாயகரமான மற்றும் வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்**

01. டிரை கிளினிங் செய்தல் அல்லது துணி வகைகளுக்கு சாயமூட்டுதல்.
02. துணி வகைகளை அச்சுப் பிரதி செய்தல் அல்லது துணி வகைகளுக்கு சாயமூட்டுதல் அல்லது பதிக் வேலை செய்தல்.
03. மின்சாரம் பயன்படுத்தி உலோகங்களுக்கு பூச்சுக்கள் பூசுதல்.
04. குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
05. எண்ணெய் அல்லது விலங்கு கொழுப்புக்கள் உற்பத்தி செய்தல்.
06. சுண்ணாம்புக் கற்கள் அல்லது வெளிச்சாங் கற்களை சுடுதல்.
07. வான வெடில்கள் அல்லது பட்டாசு வகைகள் உற்பத்தி செய்தல்.
08. பயிபர் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
09. மின்கலங்கள் (பற்றரிகள்) மின்னேற்றம் செய்தல் அல்லது பழுது பார்த்தல்.
10. உலோக வகைகள் ஒட்டவைத்தல் (வேல்டின்)
11. இயந்திரங்கள் மூலம் உலோக வகைகள் தூளாக்குதல்.
12. வார்ப்பு வேலை வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
13. தகர வேலை வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
14. மோட்டார் வாகனங்களின் உடல் அமைப்புக்கள் செய்தல்.
15. கிருமிநாசினிகள், பங்கஸ்நாசினிகள், செடிநாசினிகள் மற்றும் பூச்சிகொல்லிகள் உற்பத்தி செய்தல் அல்லது மீள் நிரப்பு செய்தல்.
16. கிருமிநாசினிகள் உற்பத்தி செய்தல் மற்றும் நுளம்புச் சுருள்கள் உற்பத்தி செய்தல்.
17. மரப் பலகைகள் பாதுகாக்கும் பூச்சுக்கள் உற்பத்தி செய்தல்.
18. கல் தார் மற்றும் சீமேந்துடன் தொடர்புபட்ட முன் கட்டுமாணப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
19. கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
20. இரும்புத் தகடுகளை கல்வனைஸ் படுத்தல்.
21. ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஈய வகைகள் உற்பத்தி செய்தல்.
22. அலுமினியப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
23. முட்கம்பிகள் உற்பத்தி செய்தல்.
24. இரும்பு ஆணி வகைகள் உற்பத்தி செய்தல்.
25. காபன் கடதாசிகள் அல்லது தட்டச்சு ரிபன் உற்பத்தி செய்தல்.
26. தகடினால் செய்யப்பட்ட பாத்திரங்கள், உருக்கு பீப்பாக்கள் அல்லது காபன் உற்பத்தி செய்தல்.
27. ஜீ.ஐ.சீ.வாளிகள் உற்பத்தி செய்தல்.
28. குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மிகை குளிர்சாதனப் பெட்டிகள் உற்பத்தி செய்தல் அல்லது பழுது பார்த்தல்.
29. பிரேக் லயினர்கள், கிளைச் லயினர்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
30. இயந்திர உபகரணங்கள் உற்பத்தி செய்தல்.
31. மின்சார உபகரணங்கள் உற்பத்தி செய்தல்.
32. இறப்பர் கலக்கப்பட்ட நார் வகைகள் உற்பத்தி செய்தல்.
33. இணைக்கும் மின்கலங்கள் (பற்றரிகள்) உற்பத்தி செய்தல்.
34. மோட்டார் வாகனங்கள் ஒன்று சேர்த்தல்.
35. (கதிர்த்தி) ரேடியேட்டர் உற்பத்தி செய்தல்.
36. இலத்திரனியல் உபகரணங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
37. உலர் மின் கலங்கள் (பற்றரிகள்) உற்பத்தி செய்தல்.
38. மின் குமிழ்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
39. வேறு ஏதேனும் அபாயகரமான மற்றும் வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்.
40. உணவிற்காக விலங்குகளை கொலை செய்தல் அல்லது கொலை செய்வதற்காக தடுத்து வைக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
41. உணவு வகைகளை வழங்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல். (பேக்கரிகள், இனிப்பு பண்டங்கள் உற்பத்தி, பழரசம்)
42. களியாட்ட விடுதி ஒன்றை நடாத்திச் செல்லல்.
43. மரக்கரி வகைகள் அல்லது பழ வழகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.

44. கற்சுரங்கம் அல்லது கற்கள் அரைக்கும் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல்.
45. தேனீர் கோப்பி கடை அல்லது சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
46. இறைச்சி வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
47. மீன் வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
48. அழகுக் கலை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
49. தங்குமிட வசதிகள் வழங்கும் இடம் அல்லது வாடிவீடு ஒன்றை நடாத்திச் செல்லல்.
50. சுற்றுலா வியாபார நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
51. சில்லறை வியாபார நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்.
52. ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்லல்.

12 - 155/4

---

## எஹெலியகொட பிரதேச சபை

### கைத்தொழில் வரி விதித்தல் - 2025

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களை செயற்படுத்துகின்ற அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற அதிகாரி ஆகிய எஹெலியகொட பிரதேச சபையின் செயலாளர் ரீ.ஆர்.சீ.கே. குணசேகர ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச் சட்டத்தின் 150 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2025 ஆம் ஆண்டு தொடர்பில் கைத்தொழில் வரி விதித்தல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் படி விதித்து அறவிடப்பட வேண்டும் என தீர்மானிக்கின்றேன். அதாவது

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) உட்பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏதாவதொரு சுற்றாடலில் நடத்தி செல்லப்படுகின்ற இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழில் தொடர்பிலும் அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவிலான கைத்தொழில் வரி 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டும் என நான் தீர்மானிக்கின்றேன்.

ரீ.ஆர்.சீ.கே. குணசேகர
செயலாளர் மற்றும் அதிகாரங்கள்
செயற்பாடுகள் நிறைவேற்றுகின்ற அதிகாரி
எஹெலியகொட பிரதேச சபை

எஹெலியகொட பிரதேச சபை,
எஹெலியகொட,
2024 நவம்பர் 29.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழில் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 01. | அப்பியாசக் கொப்பிகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | கட்டில் விரிப்புக்கள், தலையனை உறைகள், திரைச்சீலைகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I அதிகாரம் அளிக்கப்படுகின்ற கைத்தொழில் முயற்சி | நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 03. | ஆடை தைக்கும் இடங்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | கடதாசிப் பைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | ஜீ.ஐ. வாளிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | சப்பாத்துக்கள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. | பாணி வகைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. | பிரசாரத்துக்கான பதாகைகள், பேனர்கள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09. | ஈயப் பூச்சு வேலைத்தளங்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | நுளம்பு வலைகள் தைத்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | மட்பாண்டங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | சீமேந்துப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | காளான் வகைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | தேயிலை பொதியிடல் | 500.00 | 750.00 | 1000.00 |

*12 - 155 /5*

---

## எஹெலியகொட பிரதேச சபை

### தொழில் முயற்சி வரி விதித்தல் - 2025

